22/11/03

Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 27 (22.11.2003) சனிக்கிழமை இதழ் :53



'எரிக் கணேஷ்'

பல் மூக்குக் கண்ணாடி அகம்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சங்குப் பற்களைக் கட்டுவதற்கு
- நவீன முறையில் கிளிப் போடுவதற்கும்
- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெறவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளவும்

'எரிக் கணேஷ்' (சு-1802)


# அரசியல் நெருக்கடியைத் தீர்த்து பேச்சுகளை மீள ஆரம்பித்தாலே நிதியுதவி என்கிறது ஜப்பான் அரசு

(ரோக்கியோ)

**இலங்கையில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நிலவுகின்ற அரசியல் நெருக்கடிகள் தீர்க்கப்பட்டு, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டாலேயே நிதியுதவிகளைத் தொடர்ந்து வழங்கமுடியுமென்று ஜப்பானிய அரசாங்கம் நேற்று அறிவித்தது.**

ஜப்பானுக்கு ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொட, நேற்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜொறிகோ கவாகுச்சியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின்போதே ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் மிலிந்த மொறகொட இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிக்கு விரைவில் தீர்வுகாணப்படுமென்று நம்புவதாகவும், சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிததுடன், சர்வதேச நிதியுதவியுடன்தான் நாட்டினை மீளக்கட்டியெழுப்ப முடியுமென்று தெரிவித்தார்.



ஜப்பானில் அகாஷியுடன் மிலிந்த மொறகொட.

# அரசியல் நெருக்கடித் தீர்வுக்கு 15 ஆம் திகதிக்கு முன் அறிக்கை

## பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நடத்திய பேச்சுக்களின் மூலம் அமைக்கப்பட்ட குழு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் - தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பில் ஒரு கோவையைத் தயாரிக்கவுள்ளதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி நேற்றுத் தெரிவித்தது.

ஜனாதிபதி சந்திரிகா கடந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுள்ளதாம்!

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றை ஜனாதிபதி ஒத்திவைத்தமை தொடர்பாக, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா ஜனாதிபதி மீது தெரிவித்த குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார். இது அரசியல் யாப்பின்படி ஜனாதிபதிக்கு உள்ள உரிமை எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன், அரசியல் யாப்பின்படி சட்ட நிரூபணம் செய்யும் அதிகாரமும் நாடாளு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனவரி 01 இல் பதவி விலகப்போவதாக அமைச்சர் மகேஸ்வரன் நேற்று அறிவிப்பு!

(கொழும்பு)

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள புதிய வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றாத பட்சத்தில் ஜனவரி மாதம் முதலாம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவேன்.

இவ்வாறு, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் அவர் கலந்துகொண்டு உரையாற்றிக் கொண்டிருந்தபோது, ஆளுங் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடை வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது அமைச்சர் மகேஸ்வரனுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்துவிட்டதாக சபைத் தலைவர் ரவீந்திர ரன்தெனய சுட்டிக்காட்டினார்.

எனினும், அமைச்சர் மகேஸ்வரன் மேலும் உரையாற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் தமது நேரத்தை ஒதுக்கித்தருவதாகக் குறிப்பிட்டன. இதன்போது சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. இதன்காரணமாக சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கச் சபைத் தலைவர் தீர்மானித்தார்.

# மாவீரர் எழுச்சி வாரம் நேற்று முதல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் தாயக விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின.

குடாநாட்டின் பொது இடங்கள், சந்திகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் தோறும் சிவப்பு மஞ்சள் கொடிகள், பதாதைகள், பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். ராணுவத் தளபதியாக

லைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின.

அலுவலகங்கள் தோறும் சிவப்பு மஞ்சள் கொடிகள், பதாதைகள், பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்ட

# மாவீரர் நாள் வளைவுகளை அடித்துநொருக்கிய படையினர்!

## கைதடிப் பகுதியில் அடாவடி




கைதடியில் அடித்து நொருக்கப்பட்ட பதாகைகள்

(தென்மராட்சி)

கைதடியில் பொதுமக்களால் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்தின வளைவு நேற்று பொலிஸாராலும், படையினரால் அடித்து நொருக்கபபட்டது. இந்த அடாவடித்தனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினரும், ஐம்பதிற்கு மேறபட்ட பொலிஸாரும் ஈடுபட்டனர்.

காலை 8.00 மணியளவில் கைதடிச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



குரைக்கிற நாய் கடிக்குமே பாருங்கோ!

# யாழ். ராணுவத் தளபதியாக பரமி குலதுங்க பதவியேற்பு!



(கொழும்பு)

யாழ். குடாநாட்டுக்கான இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் சரத் பொன்செகா, தொண்டர் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்தே, குடாநாட்டுக்கான புதிய தளபதியாக பரமி குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக வெற்றிடத்திற்கு 91 புதிய மாணவர்கள் அனுமதி!

## மானிய ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2002/2003 கல்வியாண்டுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் பதிவினை மேற்கொள்ளாத வெற்றிடங்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு புதிதாக 91 பேரைத் தெரிவுசெய்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்களில் 30 பேர் பௌதீக கற்கைநெறிக்கும் 31 பேர் உயிரியல் விஞ்ஞான கற்கை நெறிக்கும் 30 பேர் விவசாய விஞ்ஞான கற்கைநெறிக்கும் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குவைத் விமானத்தில் வெடிகுண்டுப் புரளி!

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து நேற்று காலை குவைத்தை நோக்கி புறப்படவிருந்த விமானம் ஒன்றில் வெடி பொருட்கள் இருப்பதாக கிடைத்த அநாமநேய தொலைபேசி அழைப்பையடுத்து, அந்த விமானத்தின் பயணம் நிறுத்தப்பட்டது. இதனால், அங்கு பெரும் பதற்றம் நிலவின.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு இந்த விமானம் குவைத்தை நோக்கிப் புறப்படவிருந்ததாக விமான நிலைய

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAiR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1753)

நிரஞ்சனாஸ் சங்கானை

ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த

ஆல்பம்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

(சி-1752)

DOUBLE JEODARDY

ராஜா யாழ்ப்பாணம்.

லக்கிஸ்ரார் அஜித், மீராஜஸ்மின், கபாலி நடித்த

ஆஞ்சநேயா

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-1751)


## கலைஞர்கள் மாநாடு

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் சமாதானத்திற்கான கலைஞர் மாநாடு நாளை கொழும்பு 7இல் அமைந்துள்ள மன்றக்கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சமாதானத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட மாநாடுகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் வகையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (111)

# இலங்கை அரசு

## வடக்கு கிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு துரித மீளளிப்புத்திட்டம்

## கடன் இல. 2880 சீ.இ (C.E)

## தேசிய போட்டிக் கூறுவிலைகோரல்

## (சிறிய நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் - ஐ.எவ்.பி (I.F.B)

ஐ.எவ்.பி இல: JA/NEERP /CLG/02 திகதி 21.11.2003

1. வடக்கு கிழக்கு துரித மீளளிப்புத்திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன்வசதி ஐடீஏ (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2 மாவட்டச் செயலாளர் யாழ்ப்பாணம், இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து இதன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது மாற்றத்தக்கதான மாவட்டச்செயலாளர் பெயரில் அங்கிகரிக்கப்பட்ட வங்கியில்/அஞ்சல் அலுவலகத்தில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (DRAFT) காசக்கட்டளையாகவோ (Money Order) மாவட்டச் செயலர் அலுவலகத்தில் சமர்ப்பித்த பின் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் அவர்களிடமிருந்து 2003 .12.23 ஆம் திகதி 15.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவனங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021- 2222275 தொலை நகல் இல. 021-2222275

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 45 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும் அத்துடன் மாவட்டச் செயலாளர் யாழ்ப்பாணம் அவர்களின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணைக்கான வங்கி ஆணை / காசுக்கட்டளையையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 2003.12.24 ஆம் திகதி 15.00 மணிக்கு முன் கையளிக்கவேண்டும்.

தலைவர்,
கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

அதேதினம் 15.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம் மேற்குறிப்பிடப்பட்ட திகதியில் அலுவலகம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதேஇடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

6. ஏனைய விபரங்கள் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| கேள்வி குறியீட்டு இலக்கம் | வேலை விபரம் | கேள்விப்பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை நிறைவேற்றப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| JA/NEERP/CLG/ CB/02 | பொம்மைவெளி மகப்பேற்றுநிலைய கட்டடம் புனரமைத்தல் | 28,000.00 | 250.00 | 06 மாதங்கள் |
| J/NEERP/CLG/ CB/04 | பாசையூர் மகப்பேற்று நிலைய கட்டடம் புனரமைத்தல் | 29,000.00 | 250.00 | 06 மாதங்கள் |

7. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 03 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்விப்பத்திரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தக்காரருக்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

செ.பத்மநாதன்,
மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாணம்.
2003.11.21

## நமது ஈழநாடு நடத்திய

# தரம் ஐந்து மாணவர்களின் மாதிரி பரீட்சை பெறுபேறுகள்

| பெயர் விபரம் | மொத்த புள்ளிகள் |
|---|---|
| யா/புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை | |
| 051. பா.இந்துஜன் | 120 |
| 052. கு.பானுஜன் | 143 |
| 053. இ.நிரேஸ் | 139 |
| 054. ஆ.யேனுகானந் | 153 |
| 055. ப.குருபரன் | 122 |
| 056. வாகீசன் | 121 |
| 057. அ.கொலின் | 101 |
| 058. தசானுஷன் | 132 |
| 059. பி.பிறினோராஜ் | 109 |
| 060. இ.மணிவண்ணன் | 150 |
| 061. த.மதுரா | 100 |
| 062. ஜெ.துஷாரா | 114 |
| 063. மேரிஅனிற்றா | 128 |
| 064. ஜெ.பிரியங்கா | 128 |
| 065. சி.வேனுயா | 124 |
| 066. செ.சாகித்தியா | 123 |
| 067. ந.சனோஜா | 134 |
| 068. கு.சிவேந்திரன் | 153 |
| 069. இ.கௌசன் | 158 |
| 070. ஆ.உமாசங்கர் | 135 |
| 071. ச.கௌமாரன் | 120 |
| 072. ல.கிரிஷானா | 141 |
| 073. இ.சுதந்தரி | 127 |
| 074. யசிந்தா | 130 |
| 075. ஸ்.யூலியற்லதுஷா | 120 |
| 076. சி.சுமிதா | 154 |
| 077. மு.புளோறா | 156 |
| 078. மோ.திவ்யபாரதி | 151 |
| 079. இ.ஜெனோசா | 133 |
| 080. கரோலி | 148 |
| 081. நிசா | 139 |
| 082. க.வைஸ்ணவி | 118 |
| 083. ப.சுபேந்திரா | 159 |
| 084. ம.மதீசன் | 132 |
| 085. த.அபிலேசன் | 125 |
| 086. சி.சந்சீவன் | 127 |
| 087. த.ராகுல் | 146 |
| 088. க.சந்தோஸ்சலா | 102 |
| 089. அ.ஜனனி | 125 |
| 090. ப.சஜீவன் | 155 |
| 091. ஸ்ரீ.சுமித்திரா | 144 |
| 092. கு.நவஉஷா | 111 |
| 093. ந.மாதங்கி | 140 |
| 094. மே.சாந்தமரீன் | 124 |
| 095. ய.யஸ்மின் | 110 |
| 096. ஞா.கப்றினா | 106 |
| 097. சி.சோபிதா | 122 |
| 098. ச.அபிரா | 153 |
| 099. பு.மயூரி | 143 |
| 100. சி.சயினுஜா | 112 |
| 101. உ.சிந்துஜா | 150 |
| 102. சி.தனிஸ்ரன் | 103 |
| 103. நி.அன்ரனிநிரோஜன் | 102 |
| 104. ப.டிலானி | 100 |
| 105. இ.அனேஸ்ரன் | 153 |
| 106. ம.பேணாட்விதுஷன் | 130 |
| 107. சஞ்சுதா | 100 |
| 108. இ.வசிகரன் | 100 |
| 109. வே.சேயோன் | 141 |
| 110. ரீ.பேடினன் சைலோ | 132 |
| 111. மு.டிலான்ரோ | 129 |
| 112. நா.புராதனி | 112 |
| 113. ச.சிவதீபன் | 138 |
| 114. எஸ்.சர்மிலி | 129 |
| 115. ச.சஜீவன் | 113 |
| 116. ந.நஜீவன் | 116 |
| 117. எஸ்.கிஷாந் | 112 |
| 118. ம.சுமித்திரா | 119 |
| 119. பு.அஞ்சலோ | 134 |
| 120. செ.ஜெராம் | 156 |
| 121. பா.மாதங்கி | 114 |
| 122. இ.அபிலாசா | 118 |
| 123. டே.சாள்ஸ் | 136 |
| 124. கோ.அபிலாசினி | 126 |
| 125. சி.சபிதா | 132 |
| 126. தே.சங்கீதன் | 100 |
| 127. ச.நிஷாங்கினி | 118 |
| 128. குகபாலா | 118 |
| 129. வ.விதுஷன் | 128 |
| 130. கலைவாணி | 100 |
| 131. யோ.மதுஜா | 114 |
| 132. ப.வைகுந்தன் | 125 |
| 133. கு.தரணீயா | 123 |
| 134. தே.பிறயன் | 151 |
| 135. இ.திவாகரன் | 118 |
| 136. ஆ.தீபிகா | 143 |
| 137. இ.நோடினேஸ் | 100 |
| 138. கு.கெனிக்கிஷானி | 105 |
| 139. வி.சிவதர்சிகா | 137 |
| 140. சி.சிவநிரோஜினி | 141 |
| 141. ந.வைஷ்ணவி | 113 |
| 142. இ.கீர்த்தனா | 118 |
| 143. கு.அபர்ணா | 110 |
| 144. க.சுகேதா | 132 |
| 145. ரீ.அருளினி | 106 |
| 146. பொ.தர்சிகாஸ்மையிலினி | 100 |
| 147. வ.கேசிகா | 165 |
| 148. ஜெ.யூட்கெரன்சியா | 108 |
| 149. வி.சாருஜா | 125 |
| 150. கு.குலமகள் | 103 |
| 151. யோ.சுவேநிதா | 126 |
| 152. பு.சஞ்சிகா | 134 |
| 153. மு.டலான்ரோ | 144 |

(தொடரும்)

# ஆயுதக் குழுவொன்றை அமைப்பதற்கு முஸ்லிம்கள் முயற்சிசெய்கிறார்களாம்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

முஸ்லிம்கள் முதன்முறையாக ஆயுதக்குழு ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், இது இலங்கையில் முதலாவது நடவடிக்கையென, ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில், முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளும் கடத்தல் மற்றும் தாக்குதல்கள் காரணமாகவே இவ்வாறான ஒரு நடவடிக்கைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வர்த்தக சமூகத்தினருடனான சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் - நாட்டின் பாதுகாப்புக் கருதியே, பாதுகாப்பு அமைச்சு மற்றும் இரு அமைச்சுக்களையும் தான் பொறுப்பேற்றதாகவும், இதனால் எந்தவிதமான அரசியல் நெருக்கடியும் உருவாகவில்லை என்றும், தேசிய அரசு ஒன்றை அமைப்பதன் மூலம் இன்றைய பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளமுடியுமென தான் நம்புவதாகவும், அவ்வாறான இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான், இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் செயற்படும் தன்மையில், கிழக்கு மாகாணத்தில் வாழும் சுமார் 50 ஆயிரம் முஸ்லிம் மக்கள், வடக்கு - கிழக்கைத் தனித் தனியாகப் பிரிப்பதற்கான யோசனை ஒன்றை தன்னிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமாதானத்துக்கு உழைக்க வேண்டுமாக இருந்தால், அனைத்துத் தரப்பும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தலைவர்கள் ஒரு சிலர் மட்டும் ஈடுபட்டு, சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்தமுடியாது. உலகத்தில் எந்தப் பிரதேசத்திலும் இவ்வாறான வரலாறு இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியும், பிரதமரும் மாத்திரமல்ல, சிறுபான்மைக் கட்சிகளும் இந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். தேசிய அரசொன்றுக்கான ஆலோசனைகளை முன்வைப்பதன்மூலமே தீர்வுகாண முடியும்.

சமஷ்டி என்று சொல்லி யோசனைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்திருந்தால்கூட, அவர்கள் இன்னமும் சிறுவர்களைப் படையில் சேர்க்கின்றார்கள். ஜனநாயக வழிக்குத் திரும்பியிருக்கின்ற தமிழ் இயக்கங்களைத் தாக்குவதால், நாட்டில் பாதுகாப்பற்ற தன்மை ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும், இதனைக் கருத்திற்கொண்டே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு, தான் பதவி ஏற்றதற்குப் பின்னர், போரின் அடிப்படையில் விடுதலைப் புலிகளின் முக்கிய படைப்பலம் 6 ஆயிரமாக இருந்தது. ஆனால், கடந்த இரண்டு வருட காலத்துக்குள் 18 ஆயிரமாக உயர்ந்துள்ளது. இது அரசின் சமாதான முனைப்புக்களில் ஏற்பட்ட பின்னடைவுகளால்தான் ஏற்பட்டது.

இலங்கையில் சமாதானத்தை முன்னெடுப்பதாக இருந்தால், ஒரு தேசிய அரசாங்கத்தின் ஊடாக செயற்படுத்தவேண்டும் என்றும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார். (01)

### மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

துன்னாலை தெற்கு ஊரக தேசிய எழுச்சிப்பேரவையும், தென் துன்னை லம்போதரா விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

துன்னாலை தெற்கு கொட்டிக் குளக்கரைப் பிள்ளையார் ஆலய முன்றலில் இந்த நிகழ்வு நடைபெறும். வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் இ. மோகனதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

துன்னாலை ஊரின் மாவீரரின் பெற்றோர்கள் கௌரவிக்கும் நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.

### மாதாந்த பொது அறிவு அமர்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை தனிநாயகம் தமிழ் மன்றத்தினர் நடத்தும் மாதாந்தப் பொது அமர்வு இன்று மாலை 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரைப் பற்றி மா.ஈழவேந்தன் கருத்துரை வழங்கவுள்ளார்.

## இலங்கையும் -தாய்லாந்தும்

# குற்றச்செயல்கள் தொடர்பாக சட்ட உதவிகளைப் பரிமாறும்

(கொழும்பு)

இலங்கையும், தாய்லாந்தும் குற்றச்செயல்கள் தொடர்பில் பரஸ்பர சட்ட உதவிகளைப் பரிமாறிக் கொள்ள இருக்கின்றன.

இதுதொடர்பாக, கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் இரு நாட்டு அதிகாரிகளும் தாய்லாந்தில் பேச்சுவார்த்தையை நடத்தினர். இந்தப் பேச்சுவார்த்தையின்போது, எடுக்கப்பட்ட பரிந்துரைகள் தற்போது இரு நாடுகளின் அரசாங்கங்களிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இரு நாட்டு அரசுகளினதும் அங்கீகாரம் கிடைத்தபின்னர், இரு நாடுகளுக்குமிடையில் குற்றவாளிகளைப் பரிமாறிக்கொள்ள விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் சோதனை நடவடிக்கை போன்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

குற்றச்செயல்கள் தொடர்பில், இலங்கை அரசு, ஹொங்கொங்கில் விசேட நிர்வாகப் பிராந்தியம் மற்றும் ரஷ்ய சம்மேளனம் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - அடுத்த வருட முற்பகுதியில், இதற்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# ஓய்வூதிய, சம்பள அதிகரிப்பு தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் பிரதமர் ஆராய்வு

அரசு ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் குறித்தும், சம்பள அதிகரிப்புத் தொடர்பாகவும், தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பிரதமர் தீர்மானித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான 2 ஆம் வாசிப்பு முடிந்த பின்னர், இந்தப் பேச்சுக்கள் இடம்பெறுமென அரச ஊடகப்பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக, இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் முழுமையான நன்மைகளைப் பொதுமக்களுக்கு வழங்க முடியாதநிலை குறித்து, தாம் கவலையடைந்திருப்பதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் என, இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் பட்சத்திலேயே, வரவு - செலவுத் திட்டத்தின் முழுமையான நன்மையை அடையமுடியுமென, பிரதமர்- ஆளும்கட்சிக் கூட்டத்தில் தெரிவித்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு, நாட்டை ஒரு நிலையான இடத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அரசின் வரவு-செலவுத் திட்டத்தை வர்த்தக சம்மேளனம் வரவேற்பு!

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படக்கூடிய முக்கியமான செயற்திட்டங்களை, புதிய வரவு - செலவுத்திட்டம் அறிமுகப்படுத்தியிருப்பதாக, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தேசிய வர்த்தக சம்மேளனத்தின பிரதித்தலைவர் ஏ.கே.ஜெகல, நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சம்பள உயர்வை அவர் பெரிதும் பாராட்டினார்.

தனியார் வருமான வரி எல்லை 3 இலட்சம் ரூபாவுக்கு அதிகரிக்கப்பட்டது மற்றுமொரு முக்கிய பிரேரணையாகும்.

அதேவேளை - ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஓய்வூதிய நிவாரணமும் பாராட்டத்தக்கது, என்று அவர் மேலும் தெரிவித்தார். (01)

# புதிய ஜப்பானியத் தூதுவர் நேற்று முன்தினம் பொறுப்பேற்பு

(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜப்பானியத் தூதுவராக சக்கியொ சூடா சக்தீ- நேற்றுமுன்தினம் ஜனாதிபதி முன்னிலையில் தனது பதவிக்கான ஆவணங்களைக் கையளித்தார்.

இலங்கையின் முன்னாள் ஜப்பானியத் தூதுர் செய்சுரோ ஒட்சுகா- தனது பதவிக்காலம் முடிவடைந்து ஜப்பான் சென்றமையால், அவரின் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது பதவியேற்பு வைபவத்தில், இலங்கையில் அரசியல் நெருக்கடிகள் தோன்றிய முக்கியமான காலகட்டத்தில் பதவி ஏற்றிருப்பதாகவும், எனவே இந்த அரசியல் நெருக்கடிகள் முடிவுக்கு வந்து, ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, இலங்கையின் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்ற நம்பிக்கை ஜப்பானுக்கு இருப்பதாகவும், ஜப்பான்- இலங்கைக்கு உதவுகின்ற முக்கிய நாடு என்ற வரிசையில், ஜப்பானுக்கும் ஆர்வம் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையே இருக்கின்ற அரசியல் நெருக்கடிகளை நீக்கி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும், இதன் மூலமே ஏனைய உலகநாடுகளிலிருந்து உதவிகளைப் பெற்றுத்தர முடியுமென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ஜப்பானிய அரசாங்கம்- இலங்கையின் தற்போதைய முறுகல்நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, அரசாங்கம்- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கைக்குச் சர்வதேச உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. (01)

# புலிகளின் குரல் வானொலியின் 13 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

(கிளிநொச்சி)

புலிகளின் குரல் வானொலியின் 13 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு- நேற்றுமுன்தினம் புலிகளின் குரல் அமலன் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மாவீரர் வணக்க நடனம், வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன. வரவேற்புரையைப் புலிகளின் குரல் போராளி வெற்றிச் செல்வி நிகழ்த்தினார். அதன்பின் தலைமையுரை இடம்பெற்றது.

புலிகளின் குரல் வானொலி உரையினை- புலிகளின் குரல் பிரதம செய்தியாளர் தி.தவபாலன் நிகழ்த்தினார். சிறப்புரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில், புலிகளின் குரலின் 13 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு, தமிழீழ தேசியத் தலைவரினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பொன்.காந்தன் தலைமையிலான கவியரங்க நிகழ்வு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.




'புலிகளின் குரல்' ஆண்டு நினைவு நிகழ்வில், புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# அரசு சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தில் சாதாரண மக்களுக்கு நிவாரணமில்லை!

## சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம்- சாதாரண பொதுமக்களுக்கு நிவாரணத்தை வழங்கவில்லை என, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அக் கட்சியின் பேச்சாளருமான சரத் அமுனுகம தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின்போதே - அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் பரிந்துரைப்படி, மாதமொன்றுக்கு 12 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாக வேதனம் பெறும் ஒருவர் - 1250 ரூபாவினை வேதன உயர்வாகப் பெறுவதாகச் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டம் - சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடனேயே தயாரிக்கப்பட்டுள்ளது. இதில், தனியார் துறை மற்றும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களுக்கு எதுவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

20 வீதமாக இருந்த வற் வரி 15 வீதமாக குறைக்கப்பட்டது. 10 வீதமான வற்வரி 15 வீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே, பொருட்களின் விலைகள் உயர்வாக வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை - நாடாளுமன்றில் நேற்று விசேட உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினை மறைத்து, நேற்றுமுன்தினம் சபாநாயகர் ஆற்றிய உரை - அரசியல் அமைப்புக்கு முரணானதாகும் எனத் தெரிவித்தார்.

### தேசிய அரசாங்கம் தற்போது அவசியமில்லையென்கிறார் விநாயகமூர்த்தி

(கொழும்பு)

தேசிய அரசொன்று தற்போதைக்கு அவசியமில்லையென- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின்போதே இதனைத் தெரிவித்தார். மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையால், இல்லாத பிரச்சினையொன்று தற்போது உருவாகியுள்ளது. இதனைத் தீர்க்க வேண்டுமானால், ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பிரதமரிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (01)

# வீடமைப்பு அதிகார சபையினால்

# 10 மாதங்களில் 13 மில்லியன் உதவி

## மாவட்ட முகாமையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 10 மாதங்களில் வீடமைப்பு அதிகாரசபையால் - 13 மில்லியன் ரூபா யாழ்.மாவட்டத்திலுள்ள 346 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக, வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் எஸ். மாசிலாமணி தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளைவிட, இம்முறை இந்தக்கடன் தொகை பெற்றோரின் எண்ணிக்கை 10 வீதத்தால் அதிகரித்திருக்கின்றது.

ஏனைய மாவட்டங்களைக் காட்டிலும், குறைந்தளவு நிதியுடனேயே யாழ்.மாவட்ட வீடமைப்பு அதிகார சபை செயற்படுகின்றபோதிலும், பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் தொகையிலிருந்தே, புதிய பயனாளிகளுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கடன் திட்டத்தினை மாதாந்தம் 3,500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் எவரும் பெறமுடியும். இவர்களுக்கு ஒரு அரச உத்தியோகத்தர் சாட்சியாக இருத்தல் வேண்டும்.

இத்தகைய தகுதியுடைய எவரும் ஒரு மாதகாலத்தினுள் 50 ஆயிரம் ரூபாவினைக் கடனாகப் பெற முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலை படிப்புக்கள் அலகு வழங்கிவரும் - திரைப்படக் காட்சித் தொடரில் ஷியாம் பிரசாத் நெறியாள்கையில் உருவான "அக்னி சாஷ்சி" என்னும் மலையாளத் திரைப்படம், ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் நாளை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

## காணாமல் போனவர்கள்; வழக்கு விசாரணைகள் !

காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் - நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றன. இதன்போது, காணாமல்போன ஐந்து பேர் தொடர்பான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. மைக்கல் பேர்ணாட் ஜோன்சன், அன்ரனி கனிஸ்ரன், கந்தையா புஸ்பராஜா, சின்னத்தம்பி திருவருட்செல்வன், அன்ரனி துரைரட்ணம் ஆகியோரின் வழக்குகளே விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இவர்களுள் முதலிருவர்களினதும் வழக்குகள் தொடர்பாக, பதிவுகள் பூரணப்படுத்தப்படாமையால் அவற்றைப் பூரணப்படுத்தி, அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலதிக வழக்கு விசாரணைகள் அடுத்த மாதம் 1 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச)

## 'சகன்ஜா' கடன்பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

'சகன்ஜா' கடன் திட்டத்தின்கீழ்- கடன்பெற விரும்பும் கைத்தொழிலாளர்கள், வர்த்தகர்களைத் தொடர்பு கொள்ளுமாறு, வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர் தெ.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

இது குறித்து நமது ஈழநாட்டுக்கு அவர் தெரிவித்ததாவது -

கடந்த இரண்டு வருடங்களாக, யாழ்.மாவட்டத்தில் 'சகன்ஜா' கடன் திட்டம் நடைமுறையில் இருந்துவருகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனவின் ஏற்பாட்டில், இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இந்தக் கடன் திட்டத்தின் மூலம், புதிதாக கைத்தொழில் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்கவும், தற்போது கைத்தொழில், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் உரிமையாளர்கள் இவற்றை விஸ்தரிக்கவும் முடியும்.

எம்மால் 20 லட்சம் ரூபா வரையில், ஆரம்பக்கடனாக மிகக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்படுகின்றன.

இதனை மிகநீண்டகால அடிப்படையில் திருப்பி வழங்கக்கூடியதாக அமைவதுடன், உற்பத்திக் காலத்திற்கான வட்டியும் விலக்களிக்கப்படும்.

யாழ்.மக்கள் இதனைப் பெறுவதன்மூலம், பல்வேறு நன்மைகளை அடையமுடியும். எனினும், குறைந்தளவானோரே இதற்கு விண்ணப்பித்துள்ளனர். இது கவலைதரக்கூடிய ஓர்விடயமாகும்.

எனினும், நாளடைவில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படவிருக்கின்றது.

சரியான தகவல் மற்றும் தகமைகள் உள்ளவர்கள் - இந்தக் கடன் திட்டத்தின்கீழ், விரைவான நன்மைகளைப் பெறமுடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது

(நெடுந்தீவு)

தாய், தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகளுக்கு - பாடசாலை உபகரணங்களை வழங்க - சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் முன்வந்துள்ளது.

பெற்றோர்களை இழந்து, உறவினருடன் வாழும் 18 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு, இந்த உதவி வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் - பொதுவான விண்ணப்பப்படிவம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரப் பிரதி, கற்கும் வகுப்பு, கற்கும் பாடசாலை ஆகியவற்றை - பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் என்பவற்றுடன், முத்திரை அளவு படங்கள் இரண்டும் ஒப்படைக்கப்படவேண்டும்.

இந்தத் தெரிவு நடைமுறைகள், பிரதேச செயலாளர்கள் ஊடாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படவுள்ளது.

விண்ணப்பிக்கும் பிள்ளைகளின் விபரங்களை, டிசம்பர் - 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு, சகல பிரதேச செயலர்களையும் இந்த நிறுவனம் கோரியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 250 பேருக்கே, இந்தவுதவிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### துடுப்பாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்.துடுப்பாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தினால், புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவுசெய்வதற்கான எழுத்துப்பரீட்சை - நாளை காலை 10.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுடையோர் யாவரும் அன்றையதினம் 9.30 மணிக்கு அனுமதிக்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, பரீட்சைக்குத் தோற்றலாம் என்று சங்கச் செயலாளர் ந.ரவீந்திரா அறிவித்துள்ளார்.

### பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

மானிப்பாய் பரிஷ் லியோ கழகமும், வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்புக்கள் மாணவர் ஒன்றியமும் இணைந்து நடத்தும், சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான - பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும், நாளையும் மருதங்கேணி வித்தியாலயம், ஆழியவளை வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

இன்று சமூகக்கல்வி, ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கும் நாளை விஞ்ஞானம், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களுக்குமான கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன. (44)

### மணற்காட்டுப் பகுதியில் விறகு வெட்டத்தடை

வடமராட்சி கிழக்கின் - மணற்காடு அதன் அண்டிய பகுதிகளிலுள்ள சவுக்கங்காடுகளில், விறகு வெட்டக்கூடாது எனப் படையினர் தடை விதித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் தமது காவலரண்களில் தங்கியுள்ள படையினரின் பாதுகாப்பை முன்னிட்டு எச்சரித்து வருகின்றனர். அந்தப் பிரதேசத்துக்குள் மக்கள் நுழைவதை தடுக்கவும், கண்காணிக்கவும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (17)

### கந்தரோடை ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டு

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோயிலிலுள்ள - கொடித்தம்ப பிள்ளையாரும், அதே இடத்திலுள்ள வற்றாக்கை அம்மன் கோயிலிலுள்ள தம்பபிள்ளையாரும், நிருதி மூலையில் இருந்த பெரிய விநாயகர் சிலையும் திருட்டுப்போயுள்ளன.

மறுநாள் உடுவில் முருகமூர்த்தி கோயிலும், இதே மாதிரி இரண்டு விநாயகர் விக்கிரகங்கள் இனம் தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளன. வற்றாக்கை அம்மன் கோவிலில் கடந்த தை மாதமும் திருட்டு இடம்பெற்று மீண்டும் புதிய சிலை வைக்கப்பட்டது. (101)

### முறைசாராக் கல்வி இறுதிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டிற்கான முறைசாராக் கல்வி - இறுதிப்பரீட்சைகள் யாவும் - டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவோர் 24 ஆம் திகதி திங்கள் முதல் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜெ)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான - மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு - பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில், நெடுந்தீவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், உள்ளூர், வெளியூர் போக்குவரத்து மற்றும் ஏனைய முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. இந்தக் கூட்டம் தொடர்பான அழைப்பு அறிவித்தல்கள், உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு ஏற்கெனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (113)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர் : ப.அனுஷ்ஜன்
முகவரி : சுவிஸ்.



இரண்டாவது அகவையில்



பெயர் : உ.கிஷோர்
முகவரி : பண்டித்துறை நெல்லியடி, கரவெட்டி.

மூன்றாவது அகவையில்

பெயர் : ச.ஷகானா
முகவரி : கந்தர் மடம், யாழ்ப்பாணம்.



நான்காவது அகவையில்



பெயர் : ச.சஞ்சிகா
முகவரி : மயிலவளவு, இமையாணன்.

பெயர் : ஜெ.லக்ஸ்ஷணன்
முகவரி : 1 ஆம் வட்டாரம், நயினாதீவு.





பெயர் : ம.விஷானி
முகவரி : பழைய வீதி, கோப்பாய் தெற்கு, இருபாலை.

பத்தாவது அகவையில்

பெயர் : வி.கவாஷ்கர்
முகவரி : மீனா மகால்





பெயர் : பா.சிந்துஜா
முகவரி : 1 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்

# கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

## ஒரு புதிர்

மொத்தம் எழுத்து நான்கேதான்!
முதலும் கடைசியும் தாவரத்தை
இத்தரையில் வரச் செய்விக்கும்!
இரண்டு, நான்கு எழுத்தைவிட்டு
மிச்சம் உள்ள இரண்டெழுத்தை
மெல்ல மாற்றினால் கவியாகும்!
கடைசி எழுத்தோ தமிழ் மாதம்!
கவிதை, கதை என இரு பதங்கள்
எழுத்தை மாற்றிட உண்டாகும்!
இத்தனை விந்தையா நான்கெழுத்தில்!
இந்த விடுகதைக்கு விடை என்ன?

## தம், தம்

1. பாடங்களில் ஒன்று - தம்
2. அஞ்சல் வழி செல்வது - தம்
3. இரும்பைக் கவர்வது - தம்
4. யானையின் முகத்தில் இருப்பது - தம்

விடைகள் அடுத்த வாரம்.

## சென்றவார விடைகள்

1. விடை 3

கைப்பகுதியிலுள்ள எண்களைக் கூட்டுங்கள். இதனை A என்போம். அதுபோல் காலப்பகுதியிலுள்ள எண்களைக் கூட்டி அதனை B என வைத்துக்கொள்வோம். இப்போது A இலிருந்து B யைக் கழிக்கவும். விடை கிடைத்துவிடும்.

2. விடுபட்ட எழுத்துக்கள்

A/Y ↘ U/D ↗ G/Q ↘ M/J ↗ M/I

ஆங்கில எழுத்துக்கள் 26 ஐயும் எழுதிக்கொள்ளுங்கள். முதலில் இடமிருந்து வலமாக அம்புக்குறியிட்ட முறையில் இரண்டு எழுத்துக்களைத் தாவி, புதிய எழுத்துக்களை எழுதுங்கள். மறுவரிசையில் வலமிருந்து இடமாக மூன்று எழுத்துக்களைத் தாவி எழுதவேண்டும்.

## சிரிப்பில் பலரகம்

| | |
|---|---|
| கண்பார்த்துச் சிரிப்பவன் | - காரியவாதி |
| காணாமல் சிரிப்பவன் | - கஞ்சன் |
| கற்பனையில் சிரிப்பவன் | - கவிஞன் |
| கோபத்தில் சிரிப்பவன் | - வெறியன் |
| மோகத்தில் சிரிப்பவன் | - சிந்தனையாளன் |
| தெரியுமென்று சிரிப்பவன் | - பசப்பாளன் |
| தெரியாதென்று சிரிப்பவன் | - நடிகன் |
| இடம்பார்த்துச் சிரிப்பவன் | - எத்தன் |
| துன்பத்தில் சிரிப்பவன் | - மனிதன் |
| நீதியோடு சிரிப்பவன் | - அறிஞன் |
| செயல்கேட்டுச் சிரிப்பவன் | - பச்சோந்தி |
| செருக்குடன் சிரிப்பவன் | - அரசன் |
| போகவிட்டுச் சிரிப்பவன் | - வஞ்சகன் |
| தெரியாமல் சிரிப்பவன் | - பைத்தியக்காரன் |
| எப்பொழுதும் சிரிப்பவன் | - கோமாளி |

ச.பாரதி
தரம் - 9
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

## மழை விழா

மழையைக் கண்டு தவளைத் தாததா
மத்தளம் கொட்டுறார்
பழைய பாட்டை தினம் தினமும்
பாடிக் காட்டுறார்.

தட்டான் பூச்சி வெளியில் வந்து
சிறகடிக்குது
தம்பளப் பூச்சி மண்ணில் ஊர்ந்து
பட்டு விரிக்குது.

குட்டான் சோறு ஆக்கி ஆக்கி
அக்கா கொட்டுறாள்
குடிசை மண்ணில் கட்டிக் கட்டி
அண்ணன் இடிக்கிறான்.

வேலியெல்லாம் கார்த்திகைப் பூ
விளக்கு வைக்குது
வயல்களெல்லாம் கொக்கெழுந்து
வெள்ளை கட்டுது.

வீதியெல்லாம் வெள்ளம், காகம்
விழுந்து தோயுது
பாலர் விடும் வள்ளம் அதற்குள்
நனைந்து சாயுது.

சூரியனார் குளிரைக் கண்டு
முகிலைப் போர்க்கிறார்
சோம்பலோடு இடைக்கிடைதன்
கண்ணைச் சிமிட்டுறார்.

மாரியக்கா மின்னல் இடி
காற்றில் வருகிறாள்
மரங்கொடியை முழுக வைத்து
கரகம் ஆடுறாள்.

மு.பொன்னம்பலம்

## சந்தேகம் → விளக்கம்



ஆலமரம் - மரவகைகளிலேயே தனித்தன்மையான அமைப்புக்களைக் கொண்டது. இந்த மரம் விரிந்து, பரந்து விசாலமான கிளைகளைக் கொண்டு, பல வருடங்கள் வாழக் கூடியது.

அத்துடன், இந்த மரத்தின் தண்டுகள் பெரிய விட்டம் கொணடவையாகும். விழுதுகள் தோனற இரண்டு காரணங்கள் அடிப்படையாக அமைகின்றது.

ஒன்று - பரந்து, விரிநத கிளைகளைத் தாங்க விழு துகள் தேவை.

இரண்டு - அவ்வாறு பரந்து வியாபித்துள்ள மரத்திற்குத் தேவையான தண்ணீர் போன்ற உணவினை விநியோகிக்க விழுதுகள் அவசியம்.

இந்த விழுதுகள் ஒரு வகையில் வேரைப் போன்று செயற்படுகின்றன.

இவைதான் ஆலமரத்திற்கு விழுதுகள் தோன்றக் காரணமாகும்.

## உடல் நலமும் நோய்களும்

1. குவாசியக்கோர் நோய் என் பது புரதக் குறைபாடடினால் ஏற்படுகிறது.
2. பழங்கள் உண்ணாவிடின் ஏற்படும் நோய் - ஸ்கேவீ.
3. தொற்றுநோய்களை வருவிக்கும் இரு காரணிகள் - வைரசு, பற்றீரியா.
4. உமிழ்நீரில் காணப்படும் சமிபாட்டு நொதியம் - தயலீன் என அழைக்கப்படும்.
5. உடலில் கிருமிகளை எதிர்தது்ப் போராடுவது - வெண்குரு திக் கலன்கள்.
6. மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலை - 98.4 கு (37.8°ஊ)
7. புகையிலையில் காணப்படும் நஞ்சு - நிக்கோட்டின்.
8. முள்ளந்தண்டிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை - 33
9. சிறுபிள்ளைகளுக்குக் கொடுக கப்படும் முக்கூட்டு வக்சீனால் தடுக கப்படும் நோய்கள் - தொணடைக் கரப்பான், குக்கல், ஏர்ப்புவலி போன்றவை.

பு.ஜனனி, தரம் 8
யா/கனகரத்தினம் ம.ம.வி.


இங்கே மடிக்கவும்



## தந்திரத்தால் பூனையைக் கொன்ற எலிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அதன் அருகில் வந்த தங்கை எலி சொன்னது -"பக்கத்து வீட்டில் குடியிருக்கும் ஓர் [illegible]



"இப்ப பூனை இல்லை என்பதற்காக, இனிமேலும் பூனை இருக்காது என்று சொல்லமுடியாது. [illegible]

(தொடரும்.)

கே.வி.குணசேகரம்

# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### துருக்கி

தலைநகர் - அங்காரா
பரப்பளவு - 7,79,000 ச.கி.மீ.
நாணயம் - துருக்கிய லிரா
மொழி - துர்கிஷ், குர்திஷ்
சமயம் - சமயச்சார்பற்றது, இஸ்லாம் பின்பற்றப்படுகின்றது.
முக்கிய நகரங்கள் - அங்காரா, இஸ்தான்புல், இஸ்மிர், அடானா
சராசரி ஆயுள் - ஆண் - 68, பெண் - 73



ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமாக அமைந்துள்ள ஒரு மத்திய கிழக்கு நாடு துருக்கி. 1922 இல் ஓட்டோமன் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப்பின், 1923 இல் துருக்கி குடியரசு உருவானது. [illegible]

இந்த நாட்டின் முக்கிய விளைபொருட்களாக - கோதுமை, பார்லி, பருத்தி, ஒலிவ் பழங்கள், உருளைக்கிழங்கு விளங்குகின்றன. கனிமவளமாக - இரும்புத்தாது, செம்பு, குரோமியம், அலுமினியத்தாது மற்றும் நிலக்கரி, பெற்றோலியம் என்பன அமைந்துள்ளன. உற்பத்திகளாக - உரம், இரும்பு, இயந்திரங்கள், பெற்றோலியம், உலோக உற்பத்தி, கார் மற்றும் உருக்கு, காகிதம் விளங்குகின்றது.



# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
சி. பிரணவீ
கற்கும் பாடசாலை :-
தந்தை செல்வா தொடக்கநிலைப் பாடசாலை
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், வானொலி கேட்டல்.



முழுப்பெயர் :-
ஜீ. அமலன்
கற்கும் பாடசாலை :-
சென். பற்றிக்ஸ் கல்லூரி
தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், ஓவியம் வரைதல்.

முழுப்பெயர் :-
ர. மேனகா
கற்கும் பாடசாலை :-
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :-
கி. சரண்ராஜ்
கற்கும் பாடசாலை :-
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
தரம் :-
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட்.

முழுப்பெயர் :-
ர. அஸ்வினி
கற்கும் பாடசாலை :-
தேவரையாளி இந்துக் கல்லூரி
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம், பத்திரிகை வாசித்தல், நாடகம்.

முழுப்பெயர் :-
கி. தேனுகா
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி மகளிர் கல்லூரி
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கல்வித்துறை.

முழுப்பெயர் :-
செ. சறோன்
கற்கும் பாடசாலை :-
மகாஜனாக் கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல், கல்வித்துறை.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :.......................................
கற்கும் பாடசாலை :.......................................
கற்கும் தரம் :.......................................
வீட்டு முகவரி :.......................................
பிறந்த திகதி :.......................................
ஆர்வமுள்ள துறைகள் :.......................................

திகதி ........................ ஒப்பம் ........................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........................ பெற்றோர் ஒப்பம் ........................



அன்புச் சிறுவர்களே!


பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த பாடங்களுக்கான விடைகளை நன்றாக எழுதினீர்களா? அனைவரும் நல்லவர்களாக ஏடுக்கவேண்டும். வாழ்த்துக்கள்.

சிறுவர் அரங்கம் - உங்கள் பகுதி என்று கூறுகின்றோம். உங்கள் பகுதியை எழுதி அனுப்புங்கள். நீங்கள் - உங்களுடைய ஆக்கங்களை அனுப்பும்போது, கூடிய உறையில் 4.50 சதம் முத்திரையும் ஒட்டி அனுப்புங்கள். அப்பொழுது தான் அந்தக் கடிதங்கள் எனக்குக் கிடைக்கும். தேரடியாக ஒப்படைக்கும்பொழுது முத்திரை ஒட்டத்தேவையில்லை.

பாசமுடன் - சாரு அக்கா

இங்கே மடிக்கவும்

# நான் விரும்பும் பறவை




நான் விரும்பும் பறவை மயில் ஆகும். இது நீண்ட கழுத்தும், கால்களும் உடையது. அதன் தோகையில் பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் நிறங்கள் உண்டு.

இதற்குப் பூச்சி, புழு, தானியங்கள் போன்றவை விருப்பமான உணவாகும். மழை முகிலைக் கண்டால், அது தோகையை விரித்து ஆடும். இதை 'வாஞ்சை' என்றும் அழைப்பர்.

இது அகவும் ஓசை மிகவும் இனிமையானது. அது தோகையை விரித்து ஆடும்போது, மிக அழகாக இருக்கும்.

சி. கிசோத், தரம் -5
கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி.

# உங்கள் கைவண்ணம்



பா. லதீப்
தரம் -8
பெரியபுலம் மகா வித்தியாலயம்



த. அகிலன்
தரம் - 9
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### உங்களுக்குத் தெரியுமா

1. *உலகில் சனத்தொகை கூடிய இடம்? சீனா.*
2. *கைத்தொழில் வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்ற நாடு? ஜப்பான்.*
3. *இலங்கை எந்த கண்டத்தில் அமைந்துள்ளது? ஆசியா.*
4. *உலகில் நீளமான மதில் எங்குள்ளது? சீனாவில்.*

வ. சயந்தர், தரம் 9
கனகபுரம் ம. வி.

# அணுசக்தியின் ஆற்றல்கள்

உலகளாவியரீதியில் இன்று அணுசக்தி பற்றித் தெரியாதவர்களே இல்லை எனலாம். அணுசக்தி என்றால் உடனே அழிவுகள்தான் எம்மனதில் நிழலாடுகின்றன. எனினும், பெருமளவு ஆக்கப்பணிகளுக்கு அணுசக்தியை உபயோகிக்கும் விழிப்புணர்வுகளும், செயற்திட்டங்களும் நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன.

இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாகிக் கடுமையாக நடந்துகொண்டிருந்தது. 1941 இல் அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தை, யப்பானிய விமானங்கள் குண்டுவீசி நாசமாக்கின. பிரித்தானியாவின் ஆதிக்கத்திலிருந்த இலங்கையில், 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 இல் கொழும்பிலும், 7 ஆம் திகதி திருகோணமலையிலும் - யப்பானிய குண்டு வீச்சு விமானங்கள், குண்டுகளை வீசின. யப்பான் நாடு பெரும் முடிவுறாத யுத்தத்தில் ஈடுபட்டு, உலகநாடுகளைத் தாக்கியது.

அதன் பின்னர் 2 ஆம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, அமெரிக்கா - யப்பானின் தொழில் நகரான நாகசாகியிலும், ஹிரோஷிமாவிலும் அணுகுண்டுகளை வீசியது. இதனால், அந்த அழகிய நகரங்கள் முழுமையாகச் சீரழிந்தன. வீடுகளும், கட்டடங்களும் சாம்பலாகின. ஒரு இலட்சத்திற்கும் அதிகமான அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். பல ஆயிரம் பேர் கதிர்வீச்சுக்கு இலக்காகி காயமுற்றனர். பல ஆண்டுகள் கடந்தும் அந்த இடங்கள் புல், பூண்டுகள் முளைக்காத பாழ்நிலமாகக் காட்சி அளிக்கின்றது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு அணுக்குண்டு பயன்படுத்தப்படவில்லை என்றாலும்கூட - அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், சீனா, இந்தியா போன்ற நாடுகள் அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தியுள்ளன. இரகசியமாகப் பல நவீன அணுஆயுதங்களும், ஏவுகணைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவில் கஸ்பியன் கடலின் கிழக்கு கரையில், மிகவரண்ட பாலைநிலத்தில் ஷெவ்சேன்கோ என்ற நகரம் உள்ளது.

மிகவும் வரண்ட வெப்பமான காலநிலைச் சூழலில், இந்த நகரம் செழிப்பாகப் பச்சைப் பசேல் என்று காட்சியளிப்பது வியப்பாகவுள்ளது. உப்புநீர் கொண்ட பாலைவனத்தில், பசுந்தரையா? ஆனால் உண்மை. அங்கே பெருமரங்களும், அழகான சோலைகளும் உள்ளன. இதற்குக் காரணம் - அங்கு அணுமின்சார நிலையம் இருப்பதுதான். இந்த அணுமின் நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சக்தி முழுவதும், உப்புநீரை நன்னீராக மாற்றுகின்ற பாரிய தொழிற்சாலைக்குக் கிடைக்கிறது. இங்கு உப்புநீரைக் கொதிக்க வைத்து, அதிலிருந்து வெளிவரும் நீராவியை 'கண்டென்சர்கள்' எனப்படும் நுண்சிறப்புவாய்ந்த தாங்கிகளில் சேகரித்து குளிர விடப்படும்போது, சுத்தமான நன்னீர் கிடைக்கிறது.

இவ்வாறு வளங்கள் அற்ற ஒரு பாலை வனப்பகுதியில், இயற்கையின் எழில்பூக்கும் சோலைகள் உருவாக - அணுசக்தியே பயன்படுத்தப்படுகிறது.

பா. பிருந்தா

# குரங்கும் கழுதையும்







ஒரு ஊரில் வயதான ஒருவர் இருந்தார். ஒருநாள் காலையில் துணிகளை மூட்டைகட்டித் தனது கழுதையின் மேல் போட்டு, ஆற்றிற்கு எடுத்துச் சென்றார். மதிய உணவுக்காகச் சோறும் எடுத்து வந்திருந்தார். ஆற்றங்கரையில் துணிகளைத் தோய்த்துக் காயவைத்து விட்டு, அருகில் இருந்த மரநிழலில் அமர்ந்து நித்திரையாகிவிட்டார்.

அந்தச்சமயம் பெரிய குரங்கு ஒன்று அங்கு வந்தது. அங்கிருந்த சோற்றுப் பொதியை அவிழ்த்து, சோற்றைத் தின்றது. பின்னர் தனது கையை - அருகிலிருந்த கழுதையின் வாயில் தடவியது. அதனால், கழுதையின் வாயின் வெளிப்புறம் சோறு ஒட்டிக்கொண்டது. அதன்பின்னர் குரங்கு மரத்தின் மேலேறி உட்கார்ந்து கொண்டது.

நண்பகல் ஆனதும், வயதானவருக்குப் பசி எடுத்தது. சாப்பாட்டுப் பொதியை அவிழ்த்துப் பார்த்தார். சோறு இல்லை. பொதி வெறுமையாக இருந்தது. கழுதையைப் பார்த்தார். அதனுடைய வாயில் சோறு காணப்பட்டது. அவருக்குக் கோபம் தலைக்கேறியது. தனது சோற்றை கழுதைதான் உண்டதாக எண்ணி, ஒரு பெரிய தடியைக் கொண்டு, கழுதையை அடித்தார்.

கழுதையும் கத்திக்கொண்டு, அங்கிருந்து வேகமாக ஓடியது. பின்னர் தற்செயலாக அவர் மரத்தின் மேலிருந்த குரங்கைக் கண்டார். தனது தவறை உணர்ந்தார். அவசர புத்தியால் தனக்கு உதவும் கழுதையை அடித்ததற்காக மனம் வருந்தினார்.

உ. சிவாணி
வட்டு. மத்திய கல்லூரி.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மனத்தது மாசுஆக மாண்டார்நீர் ஆடி*
*மறைந்துஒழுகு மாந்தர் பலர்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# முரண்பாடுகளின் உடன்பாடு சமாதானத்தை ஏற்படுத்துமா?

சமாதானம் தொடர்பாக சர்வதேச சமூகம் நேரடியாவும் மறைமுகமாவும் கொடுத்துவரும் அழுத்தம் சிறிலங்கா அரசின் ஆட்சி அதிகாரபீடத்தவருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளமையை உணரக்கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா அதிரடியாக மேற்கொண்ட சட்ட ரீதியிலான அரசியல் "சதி" நடவடிக்கையின் மூலம் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னனி அரசுக்கு ஏற்பட்ட அவமானமும் பலவீனமும், சிறிலங்காவின் அரசியல் நிலையில் பாரிய குழப்பத்தை உண்டுபண்ணக்கூடிய அறிகுறியே, ரணில் அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய வேளையில் இருந்தது.

ஜனாதிபதியின் அதிகாரவலுவுக்கும் ரணிலுக்கு ஆதரவான சக்திகளின் வலுவுக்கும் இடையே ஒரு கடும்போக்கு அரசியல் முறுகல்நிலையொன்று மையம் கொண்டு, சிறிலங்காவின் அரசியல் ஸ்திரத்தன்மையையும், சமாதானத்தின் எதிர்கால முன்னெடுப்புக்களையும் முற்றிலுமே நிர்மூலமாக்கும் அபாயம் ஏற்படும் நிலையும் ஏற்பட்டது.

அரச தரப்பும், ஜனாதிபதி தரப்பும் ஆளுக்காள் மாறிமாறி கண்டனம் தெரிவித்தும், குற்றம் சுமத்தியும், அறிக்கைப் போரில் ஈடுபட்ட சமயம், நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து, சமாதான நடவடிக்கையின் அனுசரணையாளரான நோர்வே, அதன் பொறுப்புக்களில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கவும் சமாதானத்தைத் தொடரும் பொறுப்பினை, தன்வசம் அதிகாரம் எதுவும் இல்லாத காரணத்தினால் அதிகாரவலு கொண்ட ஜனாதிபதியிடமே ஒப்படைப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து ஜனாதிபதியின் மூலோபாயம் பிசுபிசுத்துப் போய்விட்டது.

சந்திரிகாவினால் சமாதானத்தினைத் தொடரும் பொறுப்பினை ஏற்கவும் முடியவில்லை, நிராகரிக்கவும் முடியவில்லை. இந்த நிலைமையானது, சமாதானம் மீதான அக்கறை கொண்ட சர்வதேச சமூகம் ஏற்கனவே எதிர்பார்த்த ஒன்றாகும்.

எனவே ஜனாதிபதியும், பிரதமரும் தமது சுய முரண்பாடுகளைக் கைவிட்டுவிட்டு விரைவில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் பலவும் வலியுறுத்தியதையடுத்து ஏற்பட்ட அழுத்தங்கள் பலவும், வெளிப்படையாக தெரியாவிட்டாலும், உண்மையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரவலுவினாலோ, ரணிலின் ராஜதந்திர மூலோபாயங்களாலோ அந்த அழுத்தங்களை புறக்கணிக்கவோ, கருத்திலெடுக்காமல் இருக்கவோ முடியாது என்பதே உண்மையாகும்.

தேசிய நல்லிணக்க அரசை உருவாக்குவதற்கான ஜனாதிபதியின் அழைப்பு இதனடிப்படையிலானதாகும். தன்னை ரணில் புறக்கணித்தாலும் ஜனாதிபதி மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகளுக்கு தான் முழு அளவில் ஆதரவளிப்பதாக அவர் பகிரங்க அறிவிப்பை வெளியிட்டதும் இதனடிப்படையிலேயேயாகும்.

இந்த அழைப்பு, அறிவிப்பு இரண்டிற்கும் மூலமாக ஆளை ஆள் மடக்கும் அரசியல் மூலோபாயங்களும் இருக்கின்றதென்பதும் உண்மையே. ஆனால், அதற்கும் அப்பால் சர்வதேச அழுத்தங்களின் கனமும் அவர்களை ஏதோ ஒரு உடன்பாட்டுக்குள் மனமின்றியேனும் இணங்கிப்போக வேண்டிய தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தம் ஒன்றினை உருவாக்கியுள்ளது என்றே கூறவேண்டும். தற்போதைய அரசியல் முறுகல்நிலைக்குத் தீர்வுகாண பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருப்பது இதனால்தான்.

அதாவது முரண்பாடுகளுக்கு இடையே ஓர் உடன்பாடு காண இருதரப்பும் ஏதோ ஒரு புற அழுத்தம் காரணமாக இணங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.


சமாதான முயற்சிகள் வெற்றிபெற ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதே ஒரே வழியென்றும் பீரிஸ் வலியுறுத்திக் கூறியுள்ளமை இதனைத் தெளிவாக்கும்.

ரணில் அரசு விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும் அவரை இன்றுவரை ஆட்சியில் நிலையாக நிற்கவைத்துள்ளது.

அதன் அடிப்படையிலான போர்நிறுத்தமும், தொடரரும் சமாதானமுமே சிறிலங்காவை அதளபாதாளத்தினுள் விழாது காப்பாற்றியுள்ளது. இந்த நிலையில் அரசியல் போட்டி சந்திரிகாவையோ, ரணிலையோ மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கும் என்பது சர்வநிச்சயம். இருதரப்பும் விருப்பமின்றி ஏற்றுக்கொள்ளும் கசப்பான உண்மையாகும்.

இதன் எதிராலியே ஐ.தே.கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் புரிந்துனர்வு ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்கான செயல்முறைகளில் ஈடுபட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்தியாகும். எதுவானாலும் மனவிருப்பின்றி புற அழுத்தங்களின் நெருக்கடிகள் காரணமாக ஏற்படும் உடன்பாடுகள் மூலம் ஒரு நிலையான, நீதியான சமாதானத்தை சந்திரிகாவும் ரணிலும் ஏற்படுத்துவார்கள் என்பது சாத்தியமா? வரலாற்று அனுபவங்கள் சாத்தியமில்லை என்றே உணர்த்தி நிற்கின்றன.

## நாடும் நடப்பும்



# மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுக்க முயல்வது இராணுவத்தின் மிலேச்சத்தனமான நடவடிக்கை!

## யாழ்.மாவட்ட மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழுத் தலைவர்

மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கத் தயாராகும் மக்களை இராணுவத்தினர் தடுக்க முயல்வது மிலேச்சத்தனமான, சர்வதேச சட்ட விதிமுறைகளையே மீறும் நடவடிக்கையாகும் என, யாழ். மாவட்ட மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் செ.இளம்பிறைநாதன் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய இடப்பெயர்விற்குப் பின்னர் எமது மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டிருந்த கல்லறைகளை அடியோடு கிளறியது இராணுவம். அந்த நிகழ்வானது உலக வரலாற்றிலே கறைபடிந்த வரலாறாகப் பதியப்பட்டது. உலகின் மனித உரிமை சட்டங்களையே மீறும் அநாகரிகமான செயலிலே அன்று இராணுவத்தினர் ஈடுபட்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக மக்கள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கவுள்ள மாவீரர் நாளையும், பல வழிகளிலே குழப்ப இராணுவத்தினர் முயன்று வருகின்றனர். இது வேதனைக்குரிய விடயமாகும்.

இன்று சர்வதேசத்தினுடைய முழுக் கவனமும் யாழ்ப்பாணத்தின்மீதே படிந்திருக்கிறது. இங்குள்ள மக்களின் உணர்வுகளை நாடிபிடித்துப் பார்ப்பதன் ஊடாகவே அவர்கள் தமது நிலைப்பாட்டை எடுக்கவுள்ளனர். எனவே, தமிழ் மக்கள் அனைவரும் இந்த வேளையிலே உணர்வெழுச்சியுடன் செயற்பட்டு எமது தலைமையின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும்.

அதன் மூலமாக அரசியல் ரீதியாக சர்வதேச சமூகத்திற்கு ஒரு அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். திம்புப் பேச்சுவார்த்தை, இந்திய இலங்கை ஒப்பந்தம், சந்திரிகாவின் சமாதானப் பேச்சுவார்த்தைகள், எவையும் தமிழ் மக்களுக்கு நியாயமானதொரு தீர்வை வழங்க முடியாது என்ற நிலையில் இன்றைய சமாதான முன்னகர்வுகள் எமக்கொரு தீர்வைத் தரும் என எண்ணியபோது அதனையும் தென்னிலங்கை அரசியற் தலைமைகள் குழப்பி வருகின்றன.

எமது உரிமைகளை யுத்தத்தின் மூலம் தீர்மானித்த காலத்தைவிட இன்றைய சமாதானம் மூலம் தீர்மானிக்க வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளபோது எமது ஆட்சியிலேயே பங்கு கேட்க பலர் ஓடி வருகின்றனர். இந்தச் சூழ்நிலை உருவாக யார் காரணம் எமது மாவீரர்களே.

எமது வாழ்வுக்காக, தலைவனின் வழியில் நின்று தியாகங்கள் பல புரிந்து எமது பிரச்சினையை சர்வதேச அரங்கிற்குக் கொண்டுசென்றவர்கள் மாவீரர்கள். இன்று எமது பிரச்சினையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் மாவீரர்கள்.

எனவே, இந்த மாவீரர்நாள் நிகழ்வை ஏனைய வருடங்களில் அனுஷ்டித்ததைவிட இன்னும் பல மடங்கு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க அனைவரும் முன்வரவேண்டும். கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் பெருமளவான கூட்டுறவுத் துறை சார்ந்த ஊழியர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மாவீரர்கள் தமக்காக அல்லாமல் மக்களுக்காகவே வாழ்ந்தார்கள்!

## மாவீரர் நாள் ஆரம்ப நிகழ்வில் கவியன்பன் உரை

(யாழ்ப்பாணம்)

மாவீரர்கள் தமக்காக வாழ்ந்தவர்கள் அல்லர். தமது மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் வாழ்ந்து தம்மை அர்ப்பணித்தவர்கள்.

இவ்வாறு யாழ். கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப்பணிபபாளர் தலைமையில் நடைபெற்ற மாவீரர் நாள ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் கல்வி மேம்பாட்டுப் பொறுப்பாளர் கவியன்பன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், இதுவரை 17,702 மாவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களின் தியாகத்தால்தான் சர்வதேசம் எம்மை கண்ணுற்றுப்பார்க்கின்றது. நாம் ஆயுத ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வல்லவரகள். உலகம் ஏற்றுக்கொள்ளும் வீரமிக்க இனத்தவரான நாங்கள், எமது உரிமைக்காகப் போராடுகின்றோம்.

மாவீரகள் செய்த தியாகத்தினை ஓராண்டு முழுவதும் நினைத்தால் கூட புரிந்துகொள்ள முடியாது. எமது போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல. இது ஓர் இனத்தின் விடுதலைக்கான போராட்டம் என சிங்கள தேசம் உணரந்து கொள்ள வைத்தவர்கள் மாவரரகள். அவர்கள் கனவுகளை நனவாக்குவதும், அவர்கள் இலட்சியத்தை அடைவதுமே அவர்களுக்கு நாங்கள் செய்யும் உவகையாகும்.

எமது இனம் யாரிடத்திலும் மண்டியிட்டு வாழ்ந்தவர்கள் அல்ல என்பதற்காக, நீங்கள் உறங்கும் போதும் இலட்சியத்தையே நேசித்தவர்கள் எனக் கூறினார்.

# 13 வருடம் தொண்டர் சேவை புரிந்தும் ஆசிரியர் நியமனம் கிடைக்கவில்லை!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பதின்மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தொண்டர்ஆசிரியராகக் கடமை புரிந்தும் இதுவரை அரசாங்க நியமனம் கிடைக்கவில்லையெனத் தெரிவித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில், கொக்குவிலைச் சேர்ந்த எஸ். கோகுலன் என்பவர் நேற்று முறைப்பாடு ஒன்றினைச் செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1990 ஆம் ஆண்டு முதல் தொண்டர் ஆசிரியராக யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடமையாற்றி வரும் நான் இன்றுவரை அரசாங்க ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படவில்லை.

இது தொடர்பாக கல்வித் திணைககளம் முதல் கல்வி அமைச்சுவரை எத்தனையோ வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

உடற்கல்வி ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய அந்தக் காலகட்டத்தில் பல சிரமங்கள் மத்தியில் நான் எனது சேவையை வழங்கி வந்துள்ளேன்.

கடந்த ஆண்டு மாத்திரமே சத்திர சிகிச்சை ஒன்றுக்காக மூன்று மாதங்கள் விடுமுறை எடுத்துள்ள நான், மற்றப்படி எந்தவொரு விடுமுறையையும் பெறாதபோதிலும் எனது சேவை புறக்கணிக்கப்பட்டிருக்கின்றமை மனவேதனை அளிக்கின்றது. இதற்கான சரியான நீதியைப் பெற்றுத் தருமாறு கோருகின்றேன் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ப)

# தமிழ் - சிங்கள கலைக்கூடலும் சிஹறல உறுமயவின் வெறியாட்டமும்

(புதன்கிழமையின் தொடர்ச்சி)

தமிழ்மக்கள் - சிங்கள மக்களுடன் புரிந்துணர்வுடன் உறவுகளைப் பலப்படுத்த எடுக்கும் இவ்வாறான முயற்சிகள், ஏன் தடுக்கப்படுகின்றன? இதனால், சிஹறல உறுமய போன்றவர்கள் அடையப்போகும் நன்மை என்ன? இதற்குச் சில தென்னிலங்கை ஊடகங்கள் செய்துவரும் மோசமான பரப்புரைகள் - நாட்டினை இன்னும் மோசமான நிலைக்கே கொண்டுசெல்லும் என்பதை இவர்களால் ஏன் உணரமுடியாமல் போகின்றதோ தெரியவில்லை.

"சிங்கள - தமிழ் கலைக்கூடல்" நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே - திவயின, ஐலண்ட் போன்ற சில பத்திரிகைகள், கொழும்பில் பொங்குதமிழ் - இது தடுக்கப்படவேண்டும் எனப்பெரும் பரப்புரைகளையும் செய்தன. அது மட்டுமல்லாமல், புளொட்டின் தலைவர் சித்தார்த்தனும், ஈ.பி.டி.பியும் கொழும்பில் பொங்குதமிழ் நடத்துவ தற்கு அனுமதிக்கக்கூடாது எனக் கூறியதாகவும் எழுதித்தள்ளின.

பொங்குதமிழ் என்றால் என்ன என்பது பற்றி அநுராதபுரம், கொழுமபு ஆகிய இடங்களில் வைத்து, பொங்குதமிழின் ஏற்பாட்டுக் குழுவினர் விளக்கினர். பொங்குதமிழ்- சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. பொங்குதமிழ் - புலிகளின் முழுயான கட்டுப்பாட்டுக்குள் நடத்துவதும் அல்லவே. பொங்குதமிழ் - , தமிழர் தாயகப் பிரதேசத்தில், படையினரின் கட்டுப்பாட்டிற்குள் "எமது நிலம் எமக்கு வேண்டும், எமது நிலமே எமக்கு வேண்டும், படையினரே உங்கள் வீடுகளுக்கு நீங்கள் போங்கள் - எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போக வேண்டும்" எனக் கேட்பதாகும். இதைத் தெரியாதவர்கள் அல்ல தென்னிலங்கை-ஊடகங்கள். தெரிந்தும் ஏன் இப்படி நடக்கின்றனரோ...? சிங்கள மக்களைக் குழப்புகின்ற னரோ. இன்னும் இளம் உயிர்களை விலை கொடுக்கத் தூபமிடுகின்ற னரோ தெரியவில்லை.

முதல்நாள் "சிங்கள - தமிழ் கலைக்கூடல்" இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நடந்து முடிந்தது. இதே பத்திரிகைகளில் அடுத்த நாள் எழுதுகின்றனர் - பொங்குதமிழைத் தடுக்கவேண்டும். மண்டபத்திற்குமுன் சிங்கள மக்களே ஒன்று திரளுங்கள். மக்கள் நிதானமானவர்கள் - இந்தப் பொய்ப்பரப்புரைகளை நம்பி ஏமாறவில்லை. பத்திரிகைகளின் தர்மம் என்ன என்பதிலும் பார்க்க, இனவாதத்தைக்கக்கும் பத்திரிகைகள் எவை என்பதை மக்கள் புரிந்து வைத்துள்ளனர். அந்த இனவாதப் பத்திரிகைகள் எழுதியவற்றை மக்கள் கருத்தில் எடுக்கவில்லை. அதனாலும், சிஹறல உறுமய தோற்று, மண்கவ்வியது. இருந்தும், விழுந்தும் மீசையில் மண்ணொட்டவில்லையெனக் கூச்சலிடுகின்றது.



சிஹறல உறு:மய - குரங்குப்பாஞ்சானுக்கு படையெடுத்து, என்ன கண்டுகொண்டது? தமிழர் தாயகப் பிரதேசத்தை மீட்க, புலிகள் பெரும் படைத்தளங்களைத் தாக்கி அழித்து, பல்லாயிரக்கணக்கான படையினர்-பேரினவாதிகளின் இனவாதத்திற்கு உயிர்களை விலையாக்கிக் கொண்டிருக்கும்போது, சிஹறல உறுமய எங்கே தலைபுதைத்துப் படுத்திருந்தது? இனவாதத்தை கக்கி, சிங்கள மக்களை மீண்டும் தோல்வியின் பக்கம் இழுத்துச்செல்ல சிஹறல உறுமய துடிக்கின்றதா? அப்படியெனின், சிஹறல உறுமயவை இன்று சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொண்டனர். அதனால்தான், முதல் முறையாகச் சிஹறல உறுமய ஒக்ரோபர் 20 ஆம் திகதி அன்று, ஹிரு குழுவினரிடம் அடி வேண்டியது. முதல் வேண்டிய அடியிலேயே அவர்களின் பலம் என்ன என்பதைப் புரிந்திருப்பார்கள்.

சிங்கள - தமிழ் கலைக்கூடல், சமாதானத்துக்கு விரோதமானதல்ல. போரிற்கு ஆதரவானதுமல்ல. அப்படியிருக்க, ஏன் இதனைத் தடுத்தார்கள். இதனைத் தடுப்பதன்மூலம் எதனைச் சாதிக்கலாமென நினைக்கின்றனர்? போராடி எமது உரிமையினைக் கேட்டும்போது, பயங்கரவாதிகள் எனக்கூறியவர்கள் - இரு மொழி பேசும் கலைஞர்கள் சந்திப்பதை, கூடுவதை, ஏன் தடுக்கவேண்டும். சண்டைக்குச் செல்லும்போது, எதனைச் சொல்லியும், எதனைச் செய்தும் உண்மையே வென்றுள்ளது அல்லது வெல்லமுடியாதுள்ளது. நிலமை இப்படியிருக்க, போரினால் தான் முடிவு காணலாம். இப்படியான நிகழ்வுகளில் தமிழரும், சிங்களவரும் கூடுவதன்மூலம் எதனையும் செய்யமுடியாதெனவா தடுக்கின்றவர்கள் கொடுக்குக் கட்டுகின்றனர் அல்லது நீங்கள் - உங்கள் தேசத்திலிருங்கள், நாங்கள் - எங்கள் தேசத்திலிருக்கின்றோம் எனக் கூறுகின்றனரா?

ஹிரு குழுவினர் தாம் சிந்திய குருதி, அன்பாகச் சிந்தியதாகத் தெரிவித்து, நிகழ்வில் கலந்து, அனைவரின் மனதையும் நெகிழச் செய்தார்கள். நிகழ்வில் கலந்த வடக்கு-கிழக்கைச் சேர்ந்த சிலர், எங்களைக் காப்பாற்ற நீங்கள் தனித்து நிற்பதா? நாங்களும் எதற்கும் தயார் என்று கூறியபோது, ஹிரு குழுவைச் சேர்ந்தவர்கள் - இது எங்கள் கடமை, இந்த இடத்தில் எதை நாம் செய்ய வேண்டுமோ, அதனையே செய்கின்றோம். எங்கள் உயிர்போனபின் தான், உங்களைத் தொடமுடியும்.

இந்த வார்த்தையைக் கேட்கும்போது - பிந்துனுவெவவில், வெலிக்கடையில், களுத்துறையில், திருகோணமலையில், மட்டக்களப்பில், வவுனியாவில், மன்னாரில், கிளிநொச்சியில், முல்லைத்தீவில், அம்பாறையில், மலைநாட்டில், யாழ்ப்பாணத்தில் .... அனைத்து இடத்திலும் தமிழர் கொலை செய்யப்படும்போது, சிங்களவர் தடுத்திருந்தால், தமிழரை அனைத்து உரிமைகளுடனும் வாழ விட்டிருந்தால் - ஓயாத அலைகளும் அடித்திராது, பொங்குதமிழ் எனத் தமிழரும் பொங்கி எழுந்திருக்க வேண்டிய தேவையும் எழுந்திராது.

தடுத்தவர் தமிழரை புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டனர். அடிக்க வந்தவர்கள் இன்னும் அழிவுகளையே விரும்புகின்றனர். சிங்கள மக்களே நீங்கள் யாருடைய பக்கம் அணி திரளப்போகின்றீர்கள்? சமாதானத்தின் பக்கமா? போரின் பக்கமா? முடிவு இரு விடயங்களை வெளிப்படுத்தும். ஒன்று - அழிவைத் தரும், அடுத்தது - அமைதியைத் தரும். எதுவானாலும், தமிழருக்கு உரிமையினைப் பெற்றுத்தரும் என்பதை எவரும் மறுத்துக் கூறமுடியாது.

கவிதை, புனைகதை, சினிமா, ஊடகம், நாடகம் பற்றிப் பேசுவதற்கு - கலைக்கூடல் ஒன்றை நடத்துவற்கே, தடுப்புக்களைப் போட்டு, குழப்பங்களை ஏற்படுத்துகின்றவர்களே - யாழ்ப்பாணத்திற்கான தரை



வழி போக்குவரத்து ஆரம்பமான பின்னர், வாகனத் தொடரணிகளில் பல்லாயிரம் சிங்கள் மக்கள் நயினாதீவிற்கும், நாகவிகாரைக்கும் என்ற பெயருடன் படையெடுத்து, படையிலிருக்கும் உறவுகளைக் கட்டித்தழுவி வந்தனர். எங்காவது ஒரு சிங்களப் பொதுமகனை மறித்து, தமிழரின் தேசத்தில் குரல் எழுப்பப்பட்டதா? சுமார் ஒரு இலட்சம் உயிர்கள் விலையாகி, எமது தேசத்தில் பல கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அவயவங்களை இழந்தவர்களும், ஆதரவற்றோரும் பல்

**கனகரவி**

லாயிரம் பேர உள்ளனர. மக்களின் வீடுகளில் ஆயுதப்படையினர் குடிகொண்டிருக்க, குடிபெயர்ந்த பல்லாயிரம் குடும்பங்கள் இன்னும் அகதி முகாம்களில் உள்ளன. இவ்வளவு ஏராளமான பாதிப்புக்களைக் கண்டு, வெந்துபோனவர்கள் - உங்களை மனிதாபிமானத்துடன் வரவேற்றார்கள்.

(தொடரும்...)

# தெற்காசியாவின் செல்லப்பிள்ளையான பாகிஸ்தானை அமெரிக்கா நம்புகிறதா?

(நேற்றைய தொடர்ச்சி...)

இந்த இரண்டாவது கூற்று - நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் சரியென்றே தோன்றுகின்றது. வெளிப்பார்வைக்குச் சீன ஏவுகணை போலவே தெரியும். பாகிஸ்தானின் ஏவுகணை ஏவப்படும்போது, சில பாகிஸ்தானின் மாயாஜாலங்கள் காட்டினாலும் காட்டலாம்.



இந்த உத்தியினால், றோவுக்கும், சி.ஐ.ஏக்கும் - பாகிஸ்தானிடம் இருக்கும் 'சகிம்' ஏவுகணைகளின் எண்ணிக்கை மாத்திரமே தெரியும். அவற்றின் இயங்குதிறன் தெரியாது என்றே கூறப்படுகின்றது.

1997 ஆம் ஆண்டு ஜுலை மாதம் மூன்றாம் திகதி - பாகிஸ்தான் ஒரு ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியது. உத்தியோக பூர்வமற்ற பத்திரிகைச் செய்திகளின் படி, அந்த ஏவுகணைப் பரிசோதனையில் பயன்படுத்தப்பட்ட ஏவுகணையின் வீச்செல்லை 800 கிலோ மீற்றர்கள். பாகிஸ்தான் கடைசி வரையில் உத்தியோகபூர்வமான தகவல் எதையும் வெளியிடவில்லை. ஆனால், இந்தியத் தரப்பு வெளியிட்ட தகவல்களின்படி - பாகிஸதான் பரிசோதனை செய்த ஏவுகணை - சீன தயாரிப்பான **M -9.**

ஆனால், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கூறியதன்படி - பாகிஸ்தான் பரிசோதனை செய்தது சீனத் தயாரிப்பான **M 11.**

இப்படியான முரண்பாடான தகவல்கள் உத்தியோகபூர்வமாக வேறுவேறு நாடுகளிலிருந்து கூறப்பட்ட பின்னரும், பாகிஸ்தானின் வாயிலிருந்து பரிசோதிக்கப்பட்ட ஏவுகணை எது என்ற விபரம் வெளியாகாமலிருந்ததில் இருந்து, அந்த ஏவுகணையில் ஏதோ வில்லங்கம் இருக்கிறது என்பது மாத்திரம் தெரியக்கூடியதாக இருந்தது. ஆனால், என்ன வில்லங்கம் என்பது பற்றிய ஊகங்கள்தான் இருந்தனவே தவிர, உண்மை இதுவரை வெளியாகவில்லை.

பாகிஸ்தான் செய்ததற்கு பதிலடி கொடுப்பதற்கென்றே, இந்தியா 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி ஏவுகணைப் பரிசோதனை ஒன்றை நடத்தியது. அதில் ஏவப்பட்ட ஏவுகணை அக்னி -2 **IRPM** ஏவுகணை. உடனே பாகிஸ்தான் மூன்று நாட்கள் கழித்து, ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி வட-கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஏவுகணையொன்றைப் பரிசோதனைக்காக ஏவியது. இதற்கிடையே சி.ஐ.ஏ வேறொரு விடயத்தை மணந்து பிடித்திருந்தது.

இந்தியா - ஏவுகணைப் பரிசோதனை நடத்திய ஏப்ரல் 14 ஆம் திகதியே, கராச்சியிலிருந்து இரவு கிளம்பிய டி.ஐ.ஏ விமானத்தில், பாகிஸதானின் ஏவுகணையுடன் சம்பந்தப்பட்ட வி.ஐ.பி. ஒருவர் கூறிய தகவல் - சி.ஐ.ஏக்குக் கிடைத்தது. கராச்சியிலிருந்து பீஜிங் சென்ற அந்த பாகிஸ்தானிய வி.ஐ.பி - டொக்டர் சமாமுபாரக்மான். இவர்தான் சகீம் திடடத்தின தலைமை விஞ்ஞானி.

ஏப்ரல் 11 ஆம் திகதி கராச்சியிலிருந்து பீஜிங் சென்றவர், ஏப்ரல் 14 ஆம் திகதி சான்சாங்கிலிருந்து இஸ்லாமாபாத் சென்ற விமானத்தில் திரும்பினார். அவர் சீனாவிலிருந்து திரும்பிய மறுநாள், ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி பாகிஸ்தான் எந்த வித முன்னறிவிப்பும் கொடுக்காமல், அடுத்த ஏவுகணைப் பரிசோதனையொன்றை நடத்தியது.

இம்முறை ஏவுகணை வைத்து ஏவப்பட்ட இடம் - கராச்சிக்கு அருகிலுள்ள ஒரு கடற்கரைச் சிறு நகரமான 'சொன்ஜியாமி'. பாகிஸ்தானின் கூற்றுப்படி அதுதான் முதன்முதலில் பாகிஸ்தான் சகீம் ரக ஏவுகணையை ஏவிப் பரிசோதனை செய்யப்பட்ட சந்தர்ப்பம் - உத்தியோக பூர்வமாக.

அந்த சந்தர்ப்பத்தில்தான் சகீம் என்ற பெயர் முதன்முதலில் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் வெளியிட்ட குறிப்புக்களின்படி - அதன் வீச்செல்லை 750 கி.மீ. எடை கொஞ்சம் அதிகம். அது ஒரு மெற்றிக்தொன். பாகிஸதான் வெளியிட்ட இந்த வீச்செல்லை எடையும் எல்லோரையும் குழப்பிவிட்டது. ஏனென்றால், சகிம் என்ற பெயரோடு ஏவப்பட்டது - சீன **M 11** என்றால், அதன் வீச்செல்லை 300 கி.மீ. எடை 500 கி.மீ. ஒரு வேளை ஆ-9 என்றால் அதன் வீச்செல்லை 800 கி.மீ. ஆனால், பேலோட் அதே 500 கி.மீ. தான்.

இது முதற்குழப்பம். அடுத்த குழப்பத்திற்குத் தயார் என்றால், இதையும் கேளுங்கள். பாகிஸ்தான் சகீம் ஏவுகணைகள் இவைதான் என்று சில புகைப்படங்களையும், வீடியோவையும் வெளியிட்டது. அதைக்கவனமாகப் பார்த்தீர்கள் என்றால், ஒரு விடயம் தெரியவரும். அதன் அமைப்பு அச்சு அசலாக சீன **N-9** இன் அமைப்பு.

சரி. உங்களுக்கு இவ்வகை ஆயுதங்களோடு, பரிச்சயம் இருந்தால், அந்தப் புகைப்படத்தில் காணப்படும் வேறொரு சாதனத்தையும் கவனித்திருப்பீர்கள். அந்த சாதனத்தின் பெயர் ரைல் -1 என்றழைப்பார்கள். பாகிஸ்தான் வெளியிட்டுள்ள புகைப்படத்தின்படி சகிமின் ரைல் எதுவென்றால் **M-9** இன் ரைல் அல்ல. **M-11** இன் திருத்தியமைக்கப்பட்ட வடிவம்.

இப்போது பாகிஸ்தான் பரிசோதனை செய்திருப்பது சகிம் 1 என்று நம்பப்படுகின்றது. இந்த விடயத்தில் பாகிஸ்தான்தான் நினைத்தது. அது எல்லோரையும் குழப்பிவிடும் உத்தி.

**கனடாவிலிருந்து ரிஷி**

(தொடரும்...)

# ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இரு இடங்களில் றொக்கற் தாக்குதல்!



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள உல்லாசப் பயணிகள் விடுதி மீதும், ஈராக்கின் எண்ணைவள அமைச்சின் மீதும் நடத்தப்பட்ட றொக்கட் தாக்குதலில் எண்ணை வள அமைச்சின் கட்டடம் முற்றாக தீப்பற்றி எரிந்தது.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், ஈராக்கின் கட்டுமானப் பணிகளுக்கென விடுதியில் தங்கியிருந்தவர்களுமே தாக்குதலுக்கு இலக்கான கட்டடங்களில் இருந்தனர். இந்தத் தாக்குதல்களின்போது இருவர் காயமடைந்ததாக, விடுதியின் முகாமையாளர் டிக்யா சலீம் தெரிவித்தார்.

மரக்கறிகளைக் கொண்டுசெல்லும் கழுதை வண்டிலில் மறைந்து வந்தவர்களே றொக்கற் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடரந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது பாவிக்கப்படாத நிலையிலிருந்த றொக்கற்றுக்களைக் கண்டுபிடித்ததாக, அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ஈராக்கிலுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினருக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் புதிய புதிய உத்திகளைக் கையாள்வதால் அமெரிக்கப் படையினர் பெரும் அச்சமடைந்துள்ளதாகத் தெரவிக்கப்படுகிறது.


## யுனிசெப் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடாத்தும் மாபெரும் பரிசுப் போட்டி

**ஓவியப் போட்டி**

❖ மாபெரும் பரிசுப்போட்டிக்கான ஓவியப்போட்டியில் பங்கு பற்றுவதற்காக விண்ணப்பங்களை (தனியாகவோ, பாடசாலையூடாகவோ) அனுப்பியவர்கள் கவனத்திற்கு.

விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் போட்டியில் பங்குபற்றலாம்.

1. யாழ்ப்பாண கல்விவலயம்.
2. வலிகாமம் கல்விவலயம்.
3. தீவக கல்விவலயம்.

ஆகிய மூன்று கல்வி வலயத்தினுள் அடங்கும் போட்டியாளர்கள் யாழ்.வேம்படி மகளிர் உயர் கல்லூரிக்கும்.

❖ தென்மராட்சி பகுதியில் இருந்து விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும்.

❖ வடமராட்சி கல்விவலயத்துக்குள் இருந்து விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்திற்கும்.

நேரடியாக சென்று போட்டியில் பங்கு பற்றலாம், வரையும் தாள் (Drawing seet's) மட்டும் போட்டி நிலையத்தில் வழங்கப்படும். வரைதலுக்கு தேவையான மற்றைய உபகரணங்களை போட்டியாளர்களே கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

❖ அனைத்து போட்டியாளர்களும் காலை 9.30 மணிக்கு போட்டி நிலையத்துக்கு வரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மேலதிக விபரங்களுக்கு
T.R.R.O.
106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 021.2222416

(சி-1818)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## முக்கிய அறிவித்தல்

### மாணவர் பதிவுகளை புதுப்பித்தல் (Renewal of Student Registration)

1. கலை மாணி
2. வணிக மாணி
3. இசை மாணி
4. நாட்டிய மாணி

வெளிவாரி கற்கை நெறிகளுக்குப் பதிவினை மேற்கொண்ட அனைத்து மாணவர்களினதும் பதிவுகள் செல்லுபடியாகும் காலம் 5 வருடங்களாகும், மேலும் இக்காலப்பகுதிக்குள் வரும் ஒவ்வொரு வருடமும் தமது பதிவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுதலும் அவசியமாகும். 1998 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியிலிருந்து பதிவுகள் செல்லுபடியானோர்களுக்கு 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதியுடன் பதிவுகள் காலவதியாகின்றன. எனவே 1998 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் பதிவுகளை மேற்கொண்ட யாவரும் தமது பதிவுகளை மேலும் நீடிப்பதற்கு விரும்பும் பட்சத்தில் தமது பதிவுப் புத்தகத்துடன் தமது பதிவினை நீடிக்கக்கோரும் கடிதத்துடன் உடனடியாக சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

குறிப்பு: நீங்கள் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது செல்லுபடியாகும் பதிவுப் புத்தகம் அவசியமாகும் என்பதை உங்களது கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

பதிவாளர்.

21.11.2003

(சி-1819)


## ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட பிரிட்டன் மக்கள் புஷ்ஷிற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி!



அமெரிக்க அதிபர் புஷ்ஷின் பிரித்தானியாவிற்கான விஜயத்தைக் கண்டித்து ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பிரித்தானியர்கள் லண்டன் நகரில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். அத்துடன், அவர்கள் ஈராக் மீதான போருக்கும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அதிபர் புஷ்ஷின் கொடும்பாவியை எடுத்துச் சென்று நிலத்தில் வீழ்த்தி, பாக்தாத் வீழ்ந்துவிட்டதாக கோஷமெழுப்பினர். பின்னர் அவர்களால் புஷ்ஷின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை புஷ்ஷிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட 67 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## மும்பாயில் உள்ள மசூதி ஒன்றில் குண்டுவெடித்து ஏழு பேர் காயம்!

இந்தியாவின் மேற்குப் பகுதியில் மசூதி ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் 7 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் மும்பாயிலுள்ள பார்பனி என்ற இடத்திலுள்ள மசூதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் மசூதியில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் மும்பாயில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் 52 பேர் கொல்லப்பட்டும், 150 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## பங்களாதேஷிலுள்ள வீடொன்றுக்கு கொள்ளையர்கள் தீவைப்பு: 9பேர் பலி!

பங்களாதேஷின் தென்பகுதியான சிற்றஹோங் மாகாணத்தில் கொள்ளையர்கள் வீடு ஒன்றுக்கு தீவைத்ததில் - அந்த வீட்டில் இருந்த 9 பேரும் தீயில் கருகி மாண்டதாகப் பங்களாதேஷ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கொள்ளையர்கள் சம்பந்தப்பட்ட வீட்டில் கொள்ளையிட முயன்றபோது, அம்முயற்றி முறியடிக்கப்பட்டதனால் ஆத்திரமடைந்த அவர்கள் அந்த வீட்டிற்குத் தீவைத்துக் கொழுத்தியதாலேயே - ஒன்பது பேரும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஊர்சுற்றி எழுதுவது

தேசிய அரசாங்கமோ, நல்லிணக்க அரசாங்கமோர் அமைப்பதற்கு அம்மா அழைப்பு விடுத்தாங்களே என்ன நடந்தது? இயல்பாக நண்பர் கேட்டார்.

அப்படி ஒரு அரசாங்கம் அமையவேண்டுமென்ற முழுவிருப்புடனா அம்மா இப்படி அழைப்பு விடுத்தார்.

தான் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து முன்பு தனக்கு உஷார்கொடுத்தவர்கள் சொன்னபடி பச்சைக் கட்சிப் பக்கமிருந்து சிலர் வருவார்கள் என்று எதிர்பார்த்தா. எப்படியும் வேறு சிலரையும் வளைத்துப்பிடிக்கலாம் என்றும் நம்பிக்கை வைத்திருந்தா. அவங்கள்தான் ரணில் அரசுக்கு ஆதரவு தெரிவித்துக் கையெழுத்துப் போட்டுக்கொடுத்திட்டாங்களே. நிலைமையைச் சமாளிக்கிறதுக்காக தேசிய அரசு என்றும், நல்லிணக்க அரசு என்றும் கதைவிட்டுப் பார்த்தா.

பதவிமோகத்தைக் கைவிட்டுவிட்டு, நாட்டைக் காப்பாற்றுவதற்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து தேசிய நல்லிணக்க அரசு அமைக்கலாம் என்று சொன்னாங்களே.

மூன்று பேருடைய அமைச்சுப் பதவிகளை அடிச்சுப்பறிச்சு, நாடாளுமன்றக் கூட்டத்தொடரையும் ஒத்திவைத்துக் கொண்டு - நல்லிணக்கமாக ஒரு அரசு அமைப்போம் வாருங்கள் என்று கூப்பிட்டால் போய்ச் சேர்ந்திடுவாங்களா?

1936 ஆம் ஆண்டில் இரண்டாவது அரசசபைக்குத் தேர்தல் நடந்தது. இத்தேர்தல் முடிந்ததும் சபை ஏழு குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவும் அதன் தலைவரைத் தெரிவுசெய்தது. இந்தக் குழுக்களில் சிங்கள வாக்காளர்களே பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்படுவதில் டி. எஸ். சேனநாயக்க, பாரன் ஜயதிலகா ஆகியோர் வெற்றிபெற்றனர். இந்தக் குழுக்களில் தமிழர்கள் எவரும் இடம்பெறவில்லை. இந்த அமைச்சரவை 'அகண்ட சிங்கள அமைச்சரவை' என்று அழைக்கப்பட்டது.

இந்த அமைச்சரவை அமைக்கப்பட்டதும் 'தமிழர்களை வைக்கவேண்டிய இடத்திலை வைச்சாச்சு' என்று டி. எஸ். சேனநாயக்க சொன்னவராம்.

இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபைத் திட்டவரைபை விடுதலைப் புலிகள் அரசிடம் கையளித்ததும்தான் - சந்திரிகா அம்மையார் அதிரடி நடவடிக்கை எடுத்து அந்தத் திட்டவரைபைப் பற்றி ஆலோசனை செய்யவிடாமல் தடுத்தார்.

அப்படித் தடுத்துவிட்டால் புலிகளின் திட்டவரைபை அப்படியே ஒதுக்கிவைத்துவிடமுடியுமா? என்று கேட்டார் நண்பர்.

அப்படி எதுவும் செய்யமுடியாது. அதை ஆலோசனைக்கு எடுத்து விவாதிப்பாங்க. கேட்கும் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமென்பாங்க. முஸ்லிம்கள் பற்றி இப்போது கண்ணீர் வடிப்பவர்கள் குரல் கொடுப்பாங்க இப்படிப் பலவிஷயங்கள் இருக்கே.

அப்போ எதுக்காக இந்த நேரத்தில் அகண்ட சிங்கள மகாசபை பற்றிச் சொன்னீங்க என்றார் நண்பர்.

இல்லை. அம்மா திட்டம்போட்டபடி நல்லிணக்க தேசிய அரசாங்கம் அமைக்க மற்றக் கட்சிகள் முன்வந்திருந்தால்- முன்பு டி. எஸ். சேனநாயக்க சொன்னமாதிரி 'தமிழர்களை (விடுதலைப் புலிகளை) வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டோம்' என்று சொல்ல நினைத்திருந்தாரோ என்று யோசித்தேன்.

1936 ஆம் ஆண்டில் டி. எஸ். சேனநாயக்க காலத்திலிருந்த தமிழர்களும், 1983 ஆம் ஆண்டுவரை இருந்த தமிழர்களும் இன்று இல்லை. அவர்கள் தாங்கள் புத்திசாலிகள் என்றும், தங்கள் படிப்பறிவையும், நாவன்மையையும் கொண்டு சாதித்துவிடலாம் என்று நினைத்தனர். 'சிங்களவன் மோடயன்' என்று மேடைகளிலும் கூடப் பேசிவந்தனர்.

ஆனால், மோட்டுச் சிங்களவன் என்று இவர்கள் நினைக்க - இவர்களை அவர்கள் மோடர்களாக்கி விட்டனர். இன்று தமிழர் நிலத்துக்கு அவன்தானே சிங்களப் பெயர் வைத்து உரிமை கொண்டாடுகிறான் என்று நண்பர் சொன்னார்.

ஆனால், இன்றும் - இனியும் அன்று தமிழனை வைக்கவேண்டிய இடத்தில் வைத்தமாதிரி வைக்கமுடியாது.

தேசிய அரசு என்ற கதை முடிந்தது. இனி அவர்களிருவருக்கிடையிலும்தான் நல்லிணக்கத்துக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருக்குது. சில தினங்கள் பொறுப்போம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

ஜனாதிபதிக்கும் ரணிலுக்குமிடையே அதாவது பொ.ஐ.முன்னணிக்கும், ஐ.தே.முன்னணிக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் நடப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

'அப்ப.....அதை அடுத்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்குமா? என்றார் கனகர்.

'ரணிலுக்கும் சந்திரிகாவுக்குமிடையில் தானே.... என்றார் மயிலர்.

'ஓமோம்..... என்றார் கனகர்.

'இப்ப சமாதானத்துக்கான யுத்தம் அவையளுக்கிடையில் தானே....... என்றார் இடையில் மணியம்...

'அப்ப சமாதான ஏற்பாட்டாளர் யார்? இது கனகர்.

'வேறையார்..... சர்வதேச சமூகம் தான்.... இது மயிலர்.

'அப்ப பேச்சுவார்த்தை எங்க நடக்கும், தாய்லாந்திலா.... ஜப்பானிலா.... ஒஸ்லோவிலா.....? என்றார் மணியம்.

'உனக்கு எப்பவும் பகிடிதான்.....எல்லாம் ஜனாதிபதி மாளிகையில் தான்...... அதுதான் அவவுக்கு பாதுகாப்பான இடமாம்..... என்றார் கனகர்.

'எப்ப இரண்டு பேரும் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப் போகினம்.... அப்படித்தானே..... பிறகு என்ன நடக்கும்? என்றார் மயிலர்.

'தேசிய நல்லிணக்க அரசு பற்றிய யோசனையை சந்திரிகா முன்வைப்பார்.... ரணில் அதற்கு மாற்று யோசனைகளை முன்வைப்பார்..... என்றார் கனகர்.

'அப்படியென்றால் அரசு புலிகள் பேச்சுவார்த்தை..... இடைக்கால நிர்வாக அதிகார சபை பற்றிய விடயம் என்னவாகும்....? இது மணியம்.

'ரணிலும், சந்திரிகாவும் சமாதானமாகாமல் இதெல்லாம் சாத்தியமா குமா? என்றார் கனகர்.

'பேரினவாதிகள் ஒன்றிணைவது சிறுபான்மையினருக்கு உரிமை கொடுப்பதற்காக என்றா நினைக்கிறீர்கள் முட்டாள்களே..... என்றது சுவரிலிருந்த பல்லி ஒன்று.

-தெருவாசி

# மகேஸ்வரனுக்கு அச்சுறுத்தலாம் எதிர்க்கட்சியினர் முறைப்பாடு!

இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை நாடாளுமன்றத்துக்குள் வைத்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் தாக்கமுற்பட்டுள்ளனர். இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபைக்கு தலைமை தாங்கிய சந்திரா கெனடியிடம் முறையிட்டுள்ளனர்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவருக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களிமிருந்து அச்சுறுத்தல் ஏற்படுமானால் எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு மிகப்பாரதூரமான அச்சுறுத்தல் ஏற்படலாம் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுபபினர்கள் தெரிவித்தனர்.

இந்து கலாசார அமைச்சர் தம்மைத் தாக்கமுற்பட்டதாக முறையிட்டால் அதுபற்றி உரிய் விசாரணை நடத்தப்படுமென சபைத் தலைவர் சந்திரா கெனடி தெரிவித்தார்.

## யாழ்.ராணுவத்...

இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவிவகித்த மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன இன்றுடன் 55 வயதைப் பூர்த்தி செய்வதால் ஓய்வு பெற்றுச்செல்கிறார்.

இவரது இடத்துக்கு புதிய இராணுவத் தலைமையதிகாரியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சூல செனிவரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குடாநாட்டுக்கான புதிய படைத்தளபதியாக நியமிக்கப் பட்டுள்ள மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க இராணுவத் தலைமையகத்தில் தனது கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார்.

1971 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்துகொண்ட அவர், 1978 ஆம் ஆணடு முதல் யாழ். குடாநாட்டில் பணியாற்றியவர். பின்னர் திருகோணமலையிலும், கெர்த்தலாவல பாதுகாபபு அக்கடமியில் பிரதிக்கட்டளை அதிகாரியாகவும், உதவி இராணுவ செயலாளராகவும், 22 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரியாகவும், பயிற்சி அதிகாரியாகவும் இருந்தார்.

மிருசுவில், ஆனையிறவு, வரணி ஆகிய இடங்களில் பிரதிக்கட்டளை அதிகாரியாகவும் பதவி வகித்திருந்தார்.

மே மாதம் முதலாம் ஆம் திகதி முதல் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வுபெற்ற இவர், கெமுனு காலாட் படையின் கட்டளை அதிகாரியாகவும் இருந்துவருகிறார். கடந்த செப்ரெம்பர் 6 ஆம் திகதி அதிகாரிகளின் பொது இயக்குநராக நியமிக்கப்பட்ட இவர், குறுகிய காலத்துக்குள் யாழ். தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.

இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல நாடுகளுக்குச் சென்று இளநிலை அதிகாரிப் பயிற்சிநெறி, புலனாய்வுப் பயிற்சிநெறி, சிரேஷ்ட கட்டளை அதிகாரிப் பயிற்சிநெறி, விசேட நடவடிக்கைப் பயிற்சிநெறி, சர்வதேச இராணுவக் கருத்தரங்கு ஆகியவற்றில் இவர் பயிற்சி பெற்றுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள போர்க் கல்லூரியின் எம்.ஏ.பட்டதாரி என்பதும குறிப்பிடத்தக்கது.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1566 திகதி: 21.11.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| F | 3 | 0 | 6 | 5 | 8 | 7 |

# மக்களின் எழுச்சியைப் பொறுக்கமுடியாத இராணுவத்தின் அடாவடி கண்டிக்கத்தக்கது

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

தமிழ்மக்கள் ஒன்று திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைப் பொறுக்கமாட்டாத இராணுவத்தினரின் அடாவடித்தனம் கண்டனத்துக்குரியது

இவ்வாறு மாவீரர் தினத்தை முன்னிட்டு மக்களால் அமைக்கபட்டு வரும் அலங்காரவளைவுகளை இராணுவத்தினர் அகற்றுவது தொடாபாக- யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று விடுக்கப்பட்ட கண்டன அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

காலத்துக்கு காலம்தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை முறியடித்து, தமிழீழ விடுதலைக்காய் தம் இன்னுயிரைத் தியாகம் செய்த எம் புனிதர்களான மாவீரர்களை நினைவு கூரும் இந்த நாளிலே, யாழ். குடாநாடு முழுவதும் அலங்கரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

மாவீரச் செல்வங்களை நினைவு கூருவதறகாக மக்களால் அமைக்கப் பட்ட அலங்கார வளைவுகளும், ஏனைய அலங்காரங்களும் சமீப நாட்களாக இராணுவத்தினரால் 'அறுத்தெறியப்படுகின்றன.

ஒட்டுமொத்த மக்களும் ஒன்று திரண்டு, மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைப் பொறுக்கமாட்டாத இராணுவத்தினர் இத்தகைய கோழைத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது.

யாழ்.குடாநாடு - இராணுவத் தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காலம் முதலாக - மாவீரர் கல்லறைகளைத் தகர்த்தும், நினைவுத்தூபிகளை இடித்தும் வருகின்றனர். உலகில் எந்தவொரு இராணுவமும் செய்யாத அநாகரிகமான செயலை இங்கு இராணுவத்தினர் செய்துவருகின்றனர்.

எம்தேச விடுதலைக்காக வித்தாகிப்போன எம்மாவீரர்களின் நினைவுநாளினை இவ்வருடம் சிறப்பாக அனுஷ்டிக்க மக்கள் தயாரான போதே, இராணுவத்தினர் தம் அடாவடித்தனத்தைக் காட்டத்தொடங்கி விட்டனர்.

மாவீரர்தின நிகழ்வுகளுக்கு இராணுவத்தினர் எவ்வித இடையூறுகளும் செய்யமாட்டார்கள் எனற உறுதிமொழி படை அதிகாரிகளால் வழங்கப்பட்டிருந்தது. இவற்றையும்மீறி இராணுவத்தினர் நேற்றும் அலங்கார வளைவுகளை அறுத்துள்ளனர்.ஒட்டுமொத்த மக்களின் எழுச்சியை பொறுக்கமாட்டாத செயறபாட்டின் வெளிப்பாடாகவே இது அமைந்துள்ளது என அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மாவீரர்...

கப்பட்டு அஞ்சலி செலுத்தி, எழுச்சி கானங்கள் இசைக்கப்பட்டு வருகின்றன. குடாநாட்டு மாவீரர்களது பெற்றோர்கள் - பாடசாலைகள், கடற்றொழில்சங்கங்கள், போன்ற பொது இடங்களில் வைத்து கௌரவிக்கப் பட்டு வருகின்றனர்.

## நாடாளுமன்றை...

மன்றில் ஜனாதிபதிக்கு உண்டெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் சார்பாக இதனைத் தெரிவிக்கும் நான், ஜனாதிபதிக்கு எதிராக, கடந்த 19 ஆம் திகதி சபாநாயகர் தெரிவித்த கருத்துக்களுடன் உடன்படவில்லை எனவும் தெரிவித்தார்.

# மாவீரர் நாள் வளைவுகளை...

சந்திப்பகுதிக்கு வந்த படையினரும், பொலிஸாரும் இணைந்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னிலையில் மாவீரர்தின வளைவுகளை அடித்து நொருக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடாவடித்தனத்தில் 'பீலபைக்' குறுப் எனப்படும் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபட்டனர். கடந்த சனிக்கிழமை அமைக்கப்பட்ட இந்த மாவீரர்தின வளைவு அன்று மாலையே படையினரின் கனரக வாகனம் மோதிச் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

பின்னர், பொதுமக்களால் சீர் செய்யப்பட்ட வளைவையே நேற்றும் படையினரால் அடித்து நொருககப் பட்டது. படையினரின் இந்த அடாவடித்தனத்தால் கைதடிப் பகுதியினூடான போக்குவரத்துக்கள் ஒரு மணித்தியாலம் வரை ஸ்தம்பிதம் அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பருத்தித்துறை, யாழ் வீதிப்பகுதியில், புலோலி ப.நோக்குக் கூட்டுறவுச்சங்கத தால் நிறுவப்பட்ட அலங்கார வளைவொன்றும் நேற்றுக்காலை படையினரால் பலாத்காரமாகக் கழற்றப்பட்டுள்ளது. எனினும், விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் போராளிகளினது தலையட்டை அடுத்து, அவை உரிய தரப்பிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த வியாழன் இரவும், நெல்லியடி நகர் மற்றும் சாவகச்சேரி நகர்ப்பகுதிகளில் இடம்பெற்றுள்ள மாவீரர்தின அலங்கார ஏற்பாடுகளும் படையினரால் தடுக்கப்பட்டது. எனினும், சாவகச்சேரி நகர்ப்பகுதியில் படையினரின் எதிர்ப்புக்கும் மத்தியிலும் பொதுமக்கள் அலங்காரப் பந்தல் ஒன்றை அமைத்துள்ளனர். ஆயினும் நெல்லியடிப்பகுதியில் படையினருக்கும், மக்களுக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டிருந்த நிலையில், துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன் நேரில் விஜயம் செய்து சுமூக நிலையை ஏற் படுத்தினார்.

நேற்றைய தினம் யாழ் நகரை அண்டிய தண்ணீர்த்தாங்கி முன்பாக சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப் பட்டமை தொடர்பாக படையினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. இவற்றுடன் தமிழீழ மாவீரர் நாள் தொடர்பாக அச்சிடப்பட்ட கொடிகளை பறக்கவிட்டிருந்த ஓட்டோ, கார்ச்சாரதிகள் படையினரால் அசசுறுத்தப்பட்டதோடு, அந்தக் கொடிகளையும் பறித்துச்சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த படையதிகாரி ஒருவராலேயே அவர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று யாழ்ப்பாணம் பிறவுண வீதியிலும் வர்த்தகர்களால் சிவப்பு, மஞ்சள் கொடிகட்டப்பட்டபோது அங்கு வந்த படையினர் அவற்றை உடனடியாக அகற்றுமாறு கூறியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின்போது, இராணுவ உயர் அதிகாரிகளால் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு படையினர் இடையூறாக இருக்கமாட்டார்கள் என உறுதியளித்திருந்தமை குறிப பிடத்தக்கது.

இதேவேளை,

தமிழீழ மாவீரர் நாள் அலங்கார வளைவு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப்பிரதிநிதிகளால் பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் அமைக்கப்பட்டபோது அதனைத்தடுக்க முற்பட்ட படையினர், பொலிசார் மாணவருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. நேற்று இரவு 7 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் குவிக்கப்பட்ட இராணுவத்தினரும் பொலிசாரும் அலங்காரவளைவு அமைக்கும் முயற்சியை தடுத்து நிறுத்தினர். இதனையடுத்து மாணவப்பிரதிநிதிகளுக்கும் சீருடைத் தரப்பினருக்குமிடையே வாக்குவாதம் முற்றியது.

பின்னர் 11 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த கண்காணிப் புக்குழுப் பிரதிநிதிகள் முத்தரப்புடனும் கலந்துரையாடி இணக்கப்பாட்டைக்கொண்டுவர முயற்சித்தனர்.

வீதிப்போக்குவரத்துக்கு இடையூறின்றி அலங்கார வளைவு அமைக்க வேண்டும் என பொலிசார் கேட்டுக் கொண்டனர். இதனையடுத்து அப்பகுதியில் குவிக்கப்பட்ட பொலிசார், இராணுவத்தினர் அகன்று சென்றனர்.

(202.111)

## அரசியல்....

காலத்தில் நடந்த நிகழ்வுகளை நல் மனத்துடன் மறந்து, தற்போது புதிய தொடக்கத்தில் இருந்து பிரச்சினையையனுகி, அதற்கான தீர்வை அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஏற்படுத்தவுள்ளார் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டம் தொடர்பாக, பிரதமர் ரணிலுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது, அவர் ஒரு கால எல்லையை இதற்காக கண்டுபிடிக்கா விட்டால், ஜனாதிபதியால் இது தொடர்பில் கோவையொன்று தயாரிக்கப்படும்.

இந்தத் திட்டத் தயாரிப்பில் ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ திட்டவெல, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். .இவர்கள் ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையேயான வேறுபாடுகள் அத்துடன் ஜனாதிபதியினால் பதவிநீக்கம் செய்யப் பட்டு பொறுப்பேறகப்பட்ட மூன்று அமைச்சுக்கள் தொடர்பாகவும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இந்தப் பேச்சுக்களில் எடுக்கப் படும் முடிவுகள் அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் கலாநிதி சரத்அமுனுகம தெரிவித்தார்.

## குவைத்...

பிரதான முகாமையாளர் தெரிவித்தார்.

தொலைபேசி மூலம் கிடைத்த தகவலை அடுத்து, விமானம் ஓடு பாதையிலிருந்து அகற்றப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிசாரும், விமானப்படையினரின் குண்டு செயலிழக்கும் படைப் பிரிவினரும் அழைக்கப்பட்டு மேற் கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பின்னர், எவ்வித வெடிபொருட்களும் விமானத்தில் இருக்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டன.

## பல்கலைக்கழக...

குழு அனுப்பிவைத்திருப்பதாக பல் கலைக்கழகப்பதிவாளர் தெரித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் பல்கலைக் கழக விளம்பரப்பலகையில் போடப் பட்டுள்ளது. இந்த மாணவர்கள் திங்கட்கிழமை பதிவுசெய்யவேண்டு மென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.